பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 29 | வியாழக்கிழமை | (12-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 55

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## ‘உதய சூரியன்’ சின்னம் நீதிமன்றில் ரெலோவின் ‘வெளிச்சவீடு’ சின்னத்தில் தமிழ்க் கூட்டமைப்பு போட்டியிடும்?

(நமது நிருபர்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு சட்டச் சிக்கல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் ரெலோவின் வெளிச்சவீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் தீர்மானித்திருப்பதாக நம்பகமாக தெரியவந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி), ரெலோ ஆகிய கட்சிகள் இம் முடிவை எடுத்துள்ளதாகவும், மாவட்ட ரீதியாக போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கையிலும், தெரிவிலும் இணக்கம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (12ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அடுத்த அதிரடி
# 39 அமைச்சர்கள் திடீர் பதவி நீக்கம்

(நமது நிருபர்)

**கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் காபந்து அரசின் அமைச்சரவை எண்ணிக்கையை 15ஆகக் குறைக்க உத்தேசித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முதல் நடவடிக்கையாக அமைச்சரவை அந்தஸ்துப் பெறாத 27 அமைச்சர்களையும் 12பிரதி அமைச்சர்களையும் சேர்த்து 39 அமைச்சர்களை நேற்றுப் பதவி நீக்கம் செய்துள்ளார்.**

**இந்தப் பதவிநீக்கம் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட7ம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

நாட்டின் நிதி வீண் விரயமாவதையும், எதிர்வரும் பொதுத் தேர்தலில ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்காகவுமே காபந்து அரசில் உள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோககுடன் அரசியல் அமைப்பின் 47வது ‘அ’ உறுப்புரைக்கு அமைய ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பாவித்து இப் பதவி நீக்கத்தை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

39 அமைச்சர்களை பதவி நீக்கம் செய்த ஜனாதிபதி ஒரு காபந்து அரசாங்கத்திற்கு இத்தகைய எண்ணிக்கையிலான அமைச்சர்கள் தேவை இல்லை என்று கருதியதாலேயே இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

39 அமைச்சர்கள் பதவி நீக்கம் தொடர்பாக குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ. ஜே. கருணாரத்தினா கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

பிரதி அமைச்சர்களும் அமைச்சரவை அந்தஸ்துப் பெறாத அமைச்சர்களினதும் பதவி நீக்கத்தை அடுத்து அவர்களது அந்தரங்கச் செயலாளர்கள், இணைப்புச் செயலாளர்களின் பிரத்தியேக பதவிகளும் வெறித்தாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரணில் விக்கிரம (12ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்
### கண்காணிப்புக் குழுத்தலைவரிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

ஐ.தே.முன்னணி அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண் பியூறு ஹெவ்டேயிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண் பியூறு ஹெவ்டே நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இச் சந்திப்பின் போது யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல் (12ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத் தீர்ப்பினை அடுத்து திரிசங்கு நிலையில் கூட்டணி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி தமிழர் விடுதலைக் கூட்டணி எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் இவ் இடைக்கால தடையுத்தரவை கொழும்புமாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

தனது அனுமதியின்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு தடை விதிக்குமாறு கொழும்பு (12ம் பக்கம் பார்க்க)



நெதர்லாந்து இராஜதந்திரிகளுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துரையாடும் காட்சி

## சுவீடன் இராஜதந்திரிகளை தமிழ்ச்செல்வன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் சுவீடன் நாட்டு வெளி விவகார அமைச்சின் இராஜதந்திரிகளை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நெதர்லாந்து அரசின் இராஜதந்திரிகளுடனான சந்திப்பை முடித்துக் கொண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் நேற்று முன்தினம் இரவு சுவீடனுக்குப் புறப்பட்டார்.

அங்கு அந்நாட்டு வெளி விவகார அமைச்சின் இராஜதந்திரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். இச் சந்திப்பில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகள் குறித்தும் அவற்றிற்கான சர்வதேச நாடுகளின் உதவிகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

சுவீடன் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு இன்று இத்தாலிக்குச் செல்லும் தமிழ்ச்செல்வன் பின்னர் அயர்லாந்துக்கும் செல்லவுள்ளார்.

(ச)

## பிரதான அரசியல் கட்சிகள் எவையும் பெரும்பான்மைப் பலத்தை பெறமாட்டா
### சிஹல உறுமயத் தலைவர் கருணாரட்ண

(கொழும்பு)


பாராளுமன்றத்தில், சிங்கள மக்களின் உண்மையான குரலை ஒலிக்கச் செய்வதற்காகவே எதிர்வரும் தேர்தலில் தனியாகவே போட்டியிடப் போவதாக சிஹல உறுமயக் கட்சித் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கட்சியின் கொழும்பு மாவட்டக் கூட்டத்தில் பேசும் போது, தேர்தலில் மக்களை ஏமாற்றுவதற்காக எமது கட்சியின் தேசிய சுலோகங்களை பின்னர் தோன்றிய வெறிபிடித்த குழுக்கள் பயன்படுத்துகின்றன. தேசியவாதிகளுக்கும் மெய்யான கட்சிகளுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகளை பிரித்தறியுமளவுக்கு மக்களுக்கு போதியளவு அறிவு முதிர்ச்சி உணடு என நம்புகிறேன்.

கட்சிக்காக ஆசனங்களைக் கைப்பற்றுவது மட்டும் முக்கிய நோக்கமல்ல. சிங்கள மக்களின் உரிமைகளுக்காக போராடுவதென்பதே எமது (12ம் பக்கம் பார்க்க)

# மகேஸ்வரன் போட்டியிடாவிடினும் நான் தனித்துப் போட்டியிடுவேன்

## சங்கரி சவால்



எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகேஸவரன் போட்டியிடாது போனா

> அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல் அவதானிகளின் கருத்துக்கள் தேர்தல் களத்தில் தொடர்ந்து வெளிவரும். இத் தேர்தல் களத்திற்கு பொதுமக்களும் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்ப முடியும்.

லும் நான் தனித்துநின்று போட்டியிடுவேன் என்று வலம்புரிக்கு அளித்த விசேட பேட்டியொன்றில் ஆனந்தசங்கரி அடித்துக் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆனந்தசங்கரியும், ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர் தி. மகேஸ்வரனும் போட்டியிட முடியாத நிலைவரலாம் என்று ஊகங்கள் அடிபடுவது தொடர்பாகக் கேட்ட பொழுதே ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில நான் போட்டியிடுவதை யாரும் தடுக்க முடியாது. தேர்தலில் போட்டியிடவேண்டாம் என்று எவரும் என்னிடம் கூறவும் முடியாது. ஏனெனில், இது ஒரு ஜனநாயக நடைமுறை. யார் வேண்டுமானாலும் இதில் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமை இருக்கிறது. அதற்குமப்பால் எமது எதிர்கால சந்ததிக்குப் பதில்சொல்ல வேணடிய பாரிய பொறுப்பும் எனக்கு இருக்கிறது. அந்தக் கடமையில் இருந்து ஒருபொழுதும் நான் பின்வாங்க முடியாது! பின்வாங்கவும் மாட்டேன் என்றார் அவர்.

மேலும், தமிழர் கூட்டமைப்புடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிடும் நிலைப்பாட்டைக் கைவிட்டு விட்டீர்களா? என்று கேட்டதற்குப் பொய்யரும் புளுகரும் மலிந்து போயுள்ள கூட்டமைப்பில் சேர்ந்து போட்டியிடவேண்டுமானால் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியில் தொடர்ந்தும் இருக்கத் தகுதியற்றவர்களை கட்சி ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. தந்தை செல்வநாயகத்தின் வழியில் தனது பணியைத் தொடரும் கூட்டணி ஒருபொழுதும் தகுதியற்றவர்களை வைத்திருக்கவில்லை வைத்திருக்கவும் மாட்டாது.

இவ்வாறனவர்கள் எம் கட்சியில் இருந்து வெளியேற்றப்படவேண்டியவர்கள் என்று அவர் கூறியதற்கு ரவிராஜ் அவர்களை நீங்கள்தான் கட்சிக்குள் கொண்டு வந்ததாகக் கூறப்படுகின்றதே என்று கேட்டதற்கு 'அதையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன். இளைய சந்ததியினரை அறிமுகப்படுத்த எண்ணிய எனக்கு அவர் செய்த பிரதியுபகாரம் இதுதான் என்று கூறிய ஆனந்தசங்கரி தான் தொடர்ந்தும் ஒரு அவதானியாக இருந்து வருவதாகவும் நிலைமைகளுக்கு ஏற்ப பொருத்தமான முடிவுகளை எடுக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

(யே)

# யாழ்ப்பாண அரசியலை தீர்மானிப்பது த.காங்கிரஸா?

## அமைச்சர் மகேஸ்வரன் கேள்வி



தற்போது குடாநாட்டில் அடிபடுகின்ற ஊகங்கள் பற்றி அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் 'வலம்புரி' தொடர்புகொண்டு கேட்டபொழுது மகேஸ்வரன் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதை தீர்மானிப்பது அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் குடும்பமும் அல்ல. இவர்கள் தான் இம்மாதிரியான வதந்திகளை இன்று தமிழ்மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றார்கள்.

மேலும், யாழ்ப்பாண அரசியலைத் தீர்மானிக்கும் முக்கிய பணி தனியே தமிழ்க் காங்கிரஸிடமும், அவர்களைச் சார்ந்த சிறுகுழுவினரிடமும் பாராலும் தாரைவார்த்துக் கொடுக்கப்படவில்லை என்றார் அவர்.

மேலும், ஐக்கியதேசியக் கட்சி தற்பொழுது தேர்தல் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு ஆராய்ந்து வருவதாகவும், இது தொடர்பில் தனது நிலைப்பாடு குறித்து அடுத்தவாரமளவில் தான் கருத்துவெளியிடவிருப்பதாகவும் தி.மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

(யே)

## தேர்தல்களம்

# இரத்த ஆறு பாயும் ஆனால் தொங்கு பாராளுமன்றமே முடிவு

## விக்டர் ஐவன் ஆருடம்

நடைபெறவிருக்கும் தேர்தல் தொடர்பில் "ராவய" பத்திரிகையின் ஆசிரியரும் இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், ஆய்வாளருமான விக்டர் ஐவனிடம் வலம்புரி கருத்துக்கேட்டபோது இந்தத் தேர்தல் மிகவும் வன்முறை நிறைந்த இரத்த ஆறு பாய்கின்ற ஒரு தேர்தலாகவே அமையும். ஆயினும், இது ஒரு தொங்கு பாராளுமன்றத்தையே முடிவாக வழங்கும் என்றார்.

மேலும், தற்போதைய நாட்டு நிலைமை பற்றி மக்கள் மிகவும் குழம்பிப்போயுள்ளனர். தேர்தலை மக்கள் விரும்பவில்லை. ஏனெனில், இது மேலும் குழப்பமான ஒரு சூழ்நிலைக்கே நாட்டைக் கொண்டுசெல்லும். வரவிருக்கின்ற தொங்கு பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மேலும் குழப்பநிலைகளை உருவாக்குவார். உண்மையில் ரணில் விக்கிரமசிங்க இல்லாத ஒரு அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சியிலேயே அவர் ஈடுபட்டிருக்கின்றார் என்று கூற வேண்டும் என்றும் சொன்னார்.

இந்தத் தேர்தலிலே தமிழர் கூட்டமைப்பின் நிலைப்பாடும், தாக்கமும் எவ்வாறு அமையப் போகின்றது என்று கேட்டதற்கு 225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் அவர்களுக்கு 24 வரையிலான ஆசனங்கள் கிடைக்கக் கூடும். அது எவ்வளவு தூரம் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக அமைய முடியும் என்பதை அவர்களது தேர்தலின் பின்னான நிலைப்பாடுகளில் இருந்தே கூற முடியும் என்றார் அவர். (யே)

# சைவபரிபாலன சபைப் பண்ணிசை போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் கடந்த 8ஆம் திகதி நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:- ஞானகி ஜெயச்சந்திரன் யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

இரண்டாம் இடம்:- கே.வர்சினி யா/மகாஜனக் கல்லூரி.

மூன்றாம் இடம்:- வி.தர்ஷனா யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்:- சங்கீதா சந்திரகுமார் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்:- சுந்தரமூர்த்தி தசாங்கன் யா/யூனியன் கல்லூரி.

மூன்றாம் இடம்:- ப.கீர்த்தனன் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**மேற்பிரிவு**

முதலாம் இடம்:- தெ.பவனுஜா யா/வேம்படி மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்:- ஜெ.வைஷ்ணவி யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

மூன்றாம் இடம்:- குலேந்திரன்-ஜெகதீசன் யா/யூனியன் கல்லூரி.

இவர்களுக்கான பரிசுகள் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருக்கும் புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினத்தில் வழங்கப்படும். (தி-3,19)

# விமான நிறுவன பங்குகளை அரசாங்கம் விற்க முயற்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமான சேவை நிறுவனத்தின் பங்குகளை தனியார் துறையினருக்கு விற்க அரசு முயற்சித்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

தற்போது இவ்விமான நிறுவனம் இலாபத்தில் இயங்கிவருகின்றது. இந்த நிலையில் அரசு தான் வைத்துள்ள பங்குகளை விற்பனை செய்ய முயன்றால் இலாபத்தில் செல்லும் இந்நிறுவனம் பின்னர் நஷ்டத்தில் செல்லக்கூடிய நிலை ஏற்படும் என விமான நிறுவனத்தின் தலைமை நிர்வாகி பீற்றர் ஹில் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டில் அதன் இலாபம் 50 சதவீதத்தால் அதிகரித்து, 2கோடியே 10 இலட்சம் டொலராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி)

# சிறில் ஹேரத் - ஹெவ்டே நேற்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் றொன் பியூறு ஹெவடேக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்திற்கும் இடையே விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை 10.15 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

இச்சந்திப்பின்போது இராணுவ கடற்படை, விமானப்படைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு முப்படை வீரர்களும் யுத்தநிறுத்த உடன்படிக்கையினைக் கடைப்பிடிக்கவேண்டிய முறை, இடம், சமாதான முயற்சிகளில் இராணுவத்தினரின் பங்கு என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எக்னஸ் பிராகரொட்டி தெரிவித்துள்ளார்.(தி-61)

# செய்தித் துளிகள்

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் கீழ் மனிதவள அபிவிருத்தி பயிற்சிப் பிரிவினரால் யாழ். பிரதேச செயலகத்துக்குட்பட்டோரிடம் இருந்து மரவேலை (ஆண்கள்) பன்னவேலைப் பயிற்சி (பெண் கள்) நெறிகளுக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் தத்தமது கிராமசேவகர்கள் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி-3,19)

## சாதக இளவரசுக்கு ஆசார்யாபிஷேகம்

(தொல்புரம்)

திருநெல்வேலி சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரியில் கிரியையியல் கற்கை நெறியில் தேறிய 'சாதக இளவரசு' சு.ரங்கநாதனுக்கு இன்று வியாழக்கிழமை காலை 7.00மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ் தானத்தில் சைவக்குருமார் பயிற்சிக்கல்லூரி அதிபர் சிவஸ்ரீ சுதா மகாலிங்கக் குருக்களால் ஆசார் யாபிஷேகம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள், காயத்திரிபீட தர்ம சாஸ்திரி குருகுல அதிபர் சிவஸ்ரீ தானுமகாதேவக் குருக் கள், குருமணி எஸ்.சர்வேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சைவக்குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ திருவானந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் து.வைத்திலிங்கம், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனசபைத் தலைவர் செ.கயிலாயநாதன் மற்றும் இளைப் பாறிய அதிபர் செ.பத்மநாதன், ஸ்ரான்லி வீதி மக்கள்வங்கி முகாமையா ளர் து.ரகு, சமாதான நீதவான் க.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-70)

## பரீட்சை

(தொல்புரம்)

தற்பொழுது யாழ். மாவட்ட அரச அலுவலர்களுக்கு நடாத்தப்பட்டு வருகின்ற தொலைக் கல்வி பாடவிதானத்தின் 2வது பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டினைப் போலவே இவ்வாண்டும் யாழ். மாவட்டத்திலேயே இப்பரீட்சை நடாத்தப்படவுள்ளதோடு, சித்தி எய்துவோருக்கு அடுத்தகட்டக் கல்வி ஒழுங்குகள் மேற்கொள்வதற்கு வசதியாக கணனிகள் சலுகை அடிப்படையிலும், கடனடிப்படையிலும் வழங்கப்படவுள்ளதாகவும் கொழும்பில் இருந்து வருகைதந்துள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (தி-70)

## மகளிர் இல்ல ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 22வது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9.30 மணிக்கு துர்க்காதேவி அன்னபூரணா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவி கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட பதில் நீதிபதி புலவர் மு.திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## பயிற்சி நெறி

(அளவெட்டி)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவின்கீழ் 'மனை முகாமைத்துவம்' பயிற்சிநெறி எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அருணோதயக் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(தி-83)

# விளையாட்டுச் செய்திகள்

# கிரிக்கெற் தரப்படுத்தல் வரிசையில் தென்னாபிரிக்க வீரர்கள் முன்னணி



ஷோன்பொல்லொக் ஜக்கலிஸ்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ளும் கிரிக்கெற் வீரர்களை தரப்படுத்தும் பிறைஸ் வோட்டர் ஹவுஸ் அன் கூப்பர்ஸ் வெளியிட்டுள்ள தரப்பட்டியலில், பந்து வீச்சு வரிசையில் தென்னாபிரிக்க அணி வீரர்கள் முதலிடத்தில் உள்ளனர். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 5 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் சிறப்பாக விளையாடியமையால் ஜக்கலிஸ் துடுப்பாட்டத்திலும், ஷோன் பொல்லக் பந்து வீச்சிலும் முன்னிலையில் உள்ளனர். துடுப்பாட்டத்தில் ஜக்கலிஸ் மேற்கிந்திய அணிக்கெதிரான 5 ஒருநாள் போட்டிகளில் 2 சதங்கள் 1 அரைச் சதத்துடன் 180.50 சராசரி என்ற அடிப்படையில் 361 ஓட்டங்கள் பெற்றார். இதன் மூலம 816 புள்ளிகளுடன் ஜக்கலிஸ் முதலாமிடத்தில் உள்ளார். இந்திய் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி சார்பில் போட்டித் தொடர் நாயகன விருது பெற்ற அடம் கில்கிறிஸ்ற் 815 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார். இலங்கை அணி சார்பாக சனத்ஜயசூரிய 7ஆவது இடத்தில் உள்ளார்.

இலங்கைக் கிரிக்கெற் வீரர்கள் பல போட்டிகளில் பங்கு கொள்ளாமை குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் இலங்கை அணியின் சுழற் பநது வீச்சாளர் முத்தையா முரளிதரன் 911 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், சமிந்தவாஸ் 836 புள்ளிகளுடன் 3வது இடத்திலும் உள்ளனர். பந்து வீச்சில் முதலிடத்தல் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் பொல்லக 922 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். (யே-121,61)

## 19 வயது இலங்கை அணி டாக்காவுக்குச் சென்றது

19 வயதுக்குட்பட்டவருக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெற் தொடா 10ம் திகதி பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. அதற்காக இலங்கை அணி நேற்று டாக்கா புறப்பட்டுச் சென்றுள்ளது. 16 நாடுகள் பங்கேற்கும் இவ் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி அடுத்த மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ளது. சகலதுறை ஆட்டக்காரரான பேர்வேஸ் மஹ்ரூப் தலமையில் இலங்கை அணி டாக்கா சென்றுள்ளது. இப் போட்டிக்கு முன் தகுதி காண் போடடிகள் ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய பிரிவுகளில் இடம்பெற்றன. இதில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, சிம்பாப்வே ஆகிய 10 நாடுகள் இத்தொடரில் நேரடியான தகுதியைப பெற்றன. போட்டிகளில் பங்கேற்றதன் மூலம் கனடா, உகண்டா, பப்புவா நியூகினி, நேபாளம், மலேசியா ஆகிய நாடுகள் தகுதி பெற்றன.

(யே-121,61)

## ஷேன் வோனினுடைய தண்டனை முடிகிறது



ஷேன்வோன்

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் சுழற்பந்து வீச்சாளரும் கிரிக்கெற் உலகின் பிரபல சுழற்பந்து வீச்சாளருமான ஷேன் வோர்ன் மீது ஊக்கமருந்து பாவனைக்காக விதிக்கப்பட்ட ஒரு வருடகால விளையாட்டுத் தடை இன்றுடன் முடிவடைகிறது. உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்ற வேளை சிலர் ஊக்க மருந்து உட்கொண்டமை கண்டு பிடிக்கப்பட்டு சர்வதேச கிரிக்கெற் பேரவை இவருக்கு ஒருவருடகால தடை விதிக்கப்பட்டது. இந்த விளையாட்டுத் தடையானது நேற்றுடன் முடிவடைந்தது. சர்வதேச கிரிக்கெற் அரங்கில் அவர் மீண்டும் விளையாடி உலக சாதனை படைக்க கங்கணம் கட்டியிருப்பது அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களில் இருந்து புலப்படுகிறது.

டெஸ்ட்போட்டிகளில் அதிக விக்கெற்றுக்களைக் கைப்பற்றியவர் வரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள வோர்ன் முதலிடத்தில் உள்ள மேற்கிந்திய அணி வீரர் கொட்ணி வோலஸின் சாதனையை முறியடிக்க இன்னும் 29விக்கெற்றுக்களே தேவைப்படுகின்றது. அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி சார்பாக சேன்வோர்ன் 491விக்கெற்றுக்களை கைப்பற்றியுள்ளார். எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கை கிரிகெற் அணியுடனான 3போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் சிலர் நிச்சயமாக இணைத்துக்கொள்ளப்படுவார் என நம்பப்படுகிறது.

(யே-121,61)

## டேவிஸ் உலகக்கிண்ண டெனிஸ் போட்டி முதல் சுற்று முடிவுகள்

டேவிஸ் கிண்ணத்திற்காக கடந்தவார இறுதியில நடைபெற்ற உலகக்குழுநிலை முதலாம் சுற்று டெனிஸ் போட்டியில் சுவீடனிடம் அவுஸ்திரேலியா அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளது. அடிலைட்டில் நடைபெற்ற இந்த குழுநிலைப் போட்டியில் 4:1என்ற ஆட்டக்கணக்கில் சுவீடனிடம் அவுஸ்திரேலியா தோல்வியைத் தழுவியிருந்தது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்கள், ஒரு இரட்டையர் ஆட்டம் மற்றும் இரண்டு மாற்று ஒற்றயைர் ஆட்டங்கள் என்ற அடிப்படையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஒரே ஒரு ஒறறையர் பிரிவில் மட்டுமே அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றிருந்தது.

இதேவேளை, இப் போட்டித் தொடரில் அமெரிக்கா, அவுஸ்திரேலியாவையும் ஆஜென்டீனா மொறோக்கோவையும் தலா 5:0 என்ற ஆட்டக்கணக்கில் வெற்றி பெற்றிருந்தன. ஸ்பெயின் செக் குடியரசையும், பெலாரஸ் ரஷ்யாவையும், சுவிஸ்லாந்து றொமேனியாவையும் தலா 3:2என்ற ஆட்டக்கணக்கில் வெற்றிகொண்டிருந்தன. மேலும் பிரான்ஸ் குரோசியாவையும், நெதர்லாந்து கனடாவையும் தலா 4:1என்ற ஆட்டக்கணக்கில் வெற்றிபெற்றிருந்தன. இதற்கமைய டேவிஸ கிண்ண டெனிஸ் போட்டிகளின் குழுநிலை முதலாம் சுற்றுப் போட்டியிகளின் போது சுவீடன், அமெரிக்கா, நெதாலாந்து, ஸ்பெயின், சுவிஸ்லாந்து, பெலாரஸ், பிரான்ஸ் மற்றும் ஆர்ஜென்டீனா ஆகிய அணிகள் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றிருக்கின்றன. (யே-68,61)

## ஊர்காவற்றுறைப் பிரதேச கபடிப் போட்டிகள் இன்று

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டுவரும் ஊர்காவற்றுறைப் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் இன்று வியாழக்கிழமை மாலை 3.00மணிக்கு ஆண்கள், பெண்கள் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இப் போட்டி நிகழ்வுகளில் கலந்துகொள்ள விண்ணப்பித்த விளையாட்டுக் கழகங்களை அன்றையதினம் குறித்த நேரத்திற்கு வருகை தந்து பங்குபற்றும் வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு.ஜே. எக்ஸ். செல்வ நாயகம் அவர்கள் கேட்டுக கொண்டுள்ளார்.

(யே-68,61)

## இலங்கைக்கு எதிரான ஆஸி. அணியின் விபரம் அறிவிப்பு

இலங்கைக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் குழாமில் வேகப்பந்து வீச்சாளரான கிளைன் மெக்ராத் மற்றும் சர்ச்சைக்குரிய சுழல்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன் ஆகியோரது பெயர்கள் இடம்பெறவில்லை. எனினும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த குழாம் இலங்கைக் கிரிக்கெற் அணிக்கெதிராக நடைபெறவுள்ள ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு மட்டுமே ஆனது. மேலும் டெஸ்ட் போட்டிகளுக் கான பெயர் விபரங்கள் இம்மாதம் 20ஆம திகதியளவில் அவுஸ்திரேலிய கிரிக்கெற் துறையினரால் வெளியிடப்படும்போது அதில் ஷேன் வோனின் பெயர் இடம்பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவுஸதிரேலியா அணியில் மேலதிக விக்கெட் காப்பாளராக பிரா ஹடின் சேர்க்கப்பட்டுள்ளார். ஆரம்ப ஆட்டக்காரர் அடம்ஸ் கில்கிறிஸ்ற், விக்கெட் காப்பாளராக அதிக நேரத்தைச் செல்விடுவதால் மேலதிக வீரர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கமைய இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணியினரது விபரம் வருமாறு ரிக்கிப் பொண்டிங் (அணித்தலைவர்), மைக்கல் கிளாக், ஜேஸன் கிலெஸ்பி, இயன்ஹாவே, மத்தியூ ஹெய்டன், பிரெட்ஹொக் மைக்கல் கஸ்ரோவிஸ், சைமன் ஹற்றிக், பிரெட்லீ, டேமியன் மாட்டின், அன்ரூசைமன்ஸ், பிரெட் வில்லியம்ஸ், மைக்கல் பெவன் மற்றும் பிரெட்ஹெடின் ஆகியோரது பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (யே-121.68.61)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்தியகல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கலலூரி அதிபர் திருமதி ச.கனகராசா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், நிக்கொட் நிறுவன மாவட்டப் பிரதித் திட்டமிடல்ப் பணிப்பாளர் க.நவரத்தினராசா முதனமை விருந்தினராகவும், கோப்பாய்க் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி. கிழக்கு அரசியல்துறைப் பொறுபபாளர் து.கிரி, யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் பூ.புலேந்திரராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-3)

## விளையாட்டு போட்டிகள்

(கந்தர்மடம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 14ம் திகதி சனிக்கிழமை காலை 11.00மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும் என கல்லூரியின் அதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார். (யே-96)

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான மெய்வல்லுநர்ப் போட்டிகள் எதிர் வரும் 13ஆம்திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (யே)

## மகளிர்தின விளையாட்டுப்போட்டியின் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் பருத்தித்துறை யுனைட்டட் விளையாட்டுக்கழக அணியும், பெண்களுக்கான தாச்சிப்போட்டியில் சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக்கழக அணியும் சம்பியன் பட்டத்தினை வென்றெடுத்துள்ளன. இப்போட்டி நிகழ்வுகளை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையினருடன் இணைந்து யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவினர் ஏற்பாடு செய்திருந்தனர். (யே-68)

## சர்வதேச கனிஷ்ட டெனிஸ் போட்டிகள்

எதிர்வரும 16ஆம் திகதி இரண்டாவது சாவதேச கனிஷ்ட டெனிஸ் தொடர் இலங்கையில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை, இந்தியா, ஜப்பான், தென்கொரியா, தாய்லாந்து, இங்கிலாந்து, ரஷ்யா, சேர்பியா, சுவீடன், பெல்ஜியம், டென்மார்க், மலேஷியா, மாலைதீவுகள், ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 84 வீர, வீராங்கனைகள் இப்போட்டிகளில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகள் யாவும் இலங்கை டெனிஸ் தலைமையகக் கிறீன் பாத் மைதானத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

(யே-121,61)

## நாதன் அஸ்ரில் விளையாடமாட்டார்

நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரரான நாதன் அஸ்ரில், தென்னாபிரிக்க அணிக்கெதிரான கிரிக்கெற் போட்டித் தொடர்களின் போது விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவாரம் உபாதையில் இருந்து மீண்டும் உளளூர்ப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியிருந்த போதிலும், இவரது முழங்காலில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை காரணமாகத் தொடர்ந்து சிலகாலம் ஓய்வெடுக்குமாறு இவரது வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டிகளில் இவர் விளையாடுவார் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(யே-68)

## இந்திய அணியின் விஜயம் முடிவாகவில்லை—கங்குலி

இந்திய அணி பாகிஸ்தான் செல்வதறகு இன்னும் இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை என இந்திய அணியின் கப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்தார். 3 மாதக் கிரிக்கெற் பயணத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியா சென்றிருந்த இந்திய அணி நேற்று ஹைதராபாத் வந்தடைந்தனர். விமான நிலையத்தில் வைத்துப் பேசிய போதே சௌரவ் கங்குலி இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகப் பாகிஸ்தான் சென்றுள்ள கிரிக்கெற லாாியக் குழு அறிக்கை அளித்ததன் பின்பே இந்திய அணி பாகிஸ்தான் செல்வது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். பின்பு சொந்த ஊரான கொல்கத்தா சென்றடைந்த அவர் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் குறித்து கிரிக்கெற் லாாியக்குழுவோடு பேச்சு நடத்துப போவதாக அறிவித்தார்.

(யே-121,61)

## இன்று ஒரு தகவல்

# ஆறுவது சினம்

"மனிதனுக்கு ஏன் சார் கோபம் வருகின்றது?" என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டேன். அவர் கோபப்படாது பதில் கூறினார். அதனால் தான் அவர் பெரியவர். "ஆசைகள் உருமாறி கோபமாக மாறுகின்றது" என்றார் அவர். மனிதன் ஆசைப்படுகிறான். அது நிறைவேறாமல் போகும்போது அவனது மனம் குழம்பி அது கோபமாக உருவெடுக்கின்றது.

கோபம் வந்தவுடன் மனிதன் தன் நிலை இழந்து விடுவான். நிலைமையைப் புரிந்து கொள்ளும் சக்தி அவனை விட்டு நீங்கிப் போய் விடுகின்றது. அதனால் கோபத்திலிருக்கின்ற மனிதன் என்ன வேண்டுமானாலும் பேசுவான். எதுவும் செய்வான். கொலை கூடச் செய்வான். இரண்டு பேர் சாதாரணமாக பேசிக்கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒரு சூடான வார்த்தை பெரிதாகிப் போய் கடைசியில் இருவரும் கத்தியைத்தூக்கிக் கொண்டு நிற்பார்கள்.

ஏன் இப்படி ஆகின்றதென்றால் கோபம் வந்தவுடன் மதிமயங்கிப் போய் விடுகிறது. அவனது புலன்கள் மீது அவனுக்கு உள்ள கட்டுப்பாடு அந்தநேரத்துக்குத் தளர்நது போய் விடுகிறது. அவன் கன்ட்ரோலில் அவை இருப்பதில்லை. அதனால் அவன் என்ன செய்கின்றான் என்பதையே அவன் உணர்வதில்லை. கோபம் என்னும் வலையில் விழுந்து விடுகிறான். அதன் பின் மாட்டிக்கொண்டு விழிக்கின்றார்கள்.

சில கோபம் மிகவும் ஆழமானதாக இருக்கும். சில மிகவும் தீவிரமான கோபமாக இருக்கும். இதைப் பொறுத்து கோபத்தை பல வகையாகப் பிரிக்கலாம். இழிவு மனதைக் காயப்படுத்துகின்றது. வெறி, ஆத்திரம், எரிச்சல் போன்றனவெல்லாம் கோபத்தின் பல வகைகள். ஆனால் இந்தக் கோபம் சுயநலம் இல்லாமல் அடுத்தவனைக் கண்டித்து நல்ல வழியில் திருப்புவதற்காகப் பயன்படும் போது அது ஆன்மீகக் கோபமாகக கருதப்படுகின்றது.

ஒரு பெண்ணின் மானம் காக்க மற்றவன் வெளிப்படுத்தும் கோபம் "தார்மீகக் கோபம்" இது தவறல்ல. பொறாமை, சுயநலம் போன்றவற்றால் ஏற்படும் கோபம் தவறானது. ஒரு வாத்தியார் பிள்ளைகளைப் பார்த்துக் கோபப்படுகிறார். இது என்ன பொறாமையால் வரும் கோபமா? இவன் என்ன இவ்வளவு நன்றாகப் படிக்கிறான். 100 இற்கு 80 புள்ளி வாங்குகிறான். நான் படிக்கும் போது 40 புள்ளிதானே வாங்கினேன் என்று நினைத்தா ஆசிரியர் பொறாமைப்படுவார்? அவர் பெருமைப்படுவார். மாணவன் நன்றாகப் படித்தால் அது அவருக்குப் பெருமை! குரு சீடர்களிடம் காட்டும் கோபம் அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக.

சிறுசிறு விஷயத்துக்கெல்லாம் சிலர் அடிக்கடி கோபப்படுவார்கள். அது அவர்களது மனப் பலவீனத்தின் அடையாளம். இப்படிப்பட்ட கோபத்தை அவனால் அடக்கமுடியும். அதற்கு என்ன செய்யவேண்டும் தெரியுமா? பொறுமை, சுய பரிசோதனை, மன்னிக்கும் தன்மை, அன்பு, மகிழ்ச்சி, சேவை மனப்பான்மை போன்றவற்றை வளர்க்கவேண்டும்.

அகங்காரம் தான் கோபத்தின் ஆணிவேர். சுய பரிசோதனை. அதாவது தன்னைத்தானே கேள்விகேட்டுக் கொள்வதன் மூலம் அகங்காரத்தை வேருடன் கிள்ளி எறியமுடியுமாம் என்று அனுபவப்பட்டவாகள் கூறுகின்றனர். மௌனத்தைக் கடைப்பிடிப்பது கூட கோபத்தை அடக்க மிக்க உதவியாக இருக்குமாம். இப்படிக் கோபத்தைப் பற்றி நிறைய விஷயம் உண்டு. எல்லாவற்றையும் வளவளவென்று கூறினால் கேட்டுக் கொண்டிருக்கின்ற உங்களுக்கும் கோபம் வந்து விடும். அதனால் இதோடு நிறுத்திக் கொள்வோம்.

நமது ஆள் ஒருவன் கூறினான் "சார் நான்தினமும் ஒரு முறையாவது என் மனைவியைப் பார்த்து ஏசிக் கொண்டேதான் இருப்பேன்! இருந்தாலும் ஒருமுறை கூட அவளுக்குக் கோபம் வந்ததே இல்லை சார்" என்றான். "அது எப்படி சாத்தியம்?" என்றேன். "எல்லாம் என் கையில்தான் சார் உள்ளது" என்றான். மிகவும் பெருமையாக! "அந்த ரகசியத்தை எனக்கும் கொஞ்சம் சொல்லக்கொடு . தகவல் கேட்பவர்களுக்கும் சொல்லிக கொடுப்போம்" என்றேன். அவன் மெதுவாக அருகில் வந்து அது பேறு ஒன்றுமில்லை சார்... நான் அவள முன் நின்று ஏசும்போது அவள உறங்கிக் கொண்டிருப்பாள் சார்! அப்படியான சமயம் பார்த்துத்தான் ஏசுவேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் சிலர் ஸ்ரீ.சு.கட்சியுடன் சேர விருப்பம்

## -என்கிறார் அனுராபண்டாரநாயக்க-


(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பின் மூலம் நாட்டில் கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காணப்படவுள்ளது.

இதற்கு ஓர் ஆயத்த நடவடிக்கையாகவே ஐக்கிய தேசியக்கட்சியில் அங்கம் வகித்த முன்னாள் அமைச்சர்கள் பலர் அக்கட்சியை படுதோல்வியடையச் செய்யவேண்டுமென்ற நோக்கில், எம்முடன கூட்டுச்சேர்வதற்குப் பெருவிருப்பம் தெரிவித்து வருகின்றனர் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும,சகோதரருமான அனுரா பண்டாரநாயக்க தெரிவிததுள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், மக்களை அவதிக்குள்ளாக்கி, பெரும் கஷடங்களை ஏற்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியை சனிக்கிழமை நள்ளிரவே ஜனாதிபதி ஆழக்குழி தோண்டிப் புதைத்து கிரியைகளையும் நடத்திவிட்டார்.



இந்நாட்டுமக்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியை விரும்பவில்லை. அவ் அரசாங்கத்தை விரட் டியடிப்பதற்காகவே காத்திருந்த மக்களுக்கு பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு,ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி பொதுத்தேர்தல் நடாத்தப்படும என்ற ஜனாதிபதயின் அறிவிப்பு மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயமாகவே அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டுளளார். (தி-18)

# கூட்டணியை குலைப்பதே ஜனாதிபதியின் குறிக்கோள்

## இராணுவ ஆய்வாளர்கள் கருத்து

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டணி வலுவான ஆசனங்களுடன் பாராளுமன்றம் வருவதைத் தடுக்க, அவர்களின் வேட்பு மனுத்தாக்கல் ஒழுங்கமைப்புக்களில் ஒன்றுபட அவகாசம் அளிக்கப்படக் கூடாது என்பதற்காகவே வேட்பு மனுத்தாக்கல் திகதியை 17 ஆம் திகதிக்கு ஜனாதிபதி சந்திரிகா அறிவித்தார் என இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தை திடீரெனக் கலைத்த ஜனாதிபதி சந்திரிகா வேட்பு மனுத்தாக்கலுக்கு 10 நாட்கள் அவகாசம் வழங்கியிருக்கிறார். இதற்குள் தமிழ்த் தேசியக்கூட்டணி ஒன்றுபட்ட கருத்து ஒற்றுமைக்கு வரமுடியாது. அதனால் அவர்களால் ஒழுங்கான வேட்பாளர்களை நியமிக்கமுடியாது. இதனால் இவர்களின் வெற்றிகளை தடுக்கலாம் என்ற திட்டத்திலேயே வேட்பு மனுத்தாக்கலுக்கு 10 நாள் அவகாசத்தை மட்டும் ஜனாதிப்தி சந்திரிகா கொடுத்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் முனைப்பான தமிழீழ விடுதலைப்போராட்டம் ஆயுத ரீதியாக பெரும வெற்றிகளை சாதித்துள்ளது. பாராளுமன்ற பிரதிநிதிதுவம் தமிழர்களுக்கு எந்தவொரு உரிமைகளையும் பெற்றுத்தரப்போவதில்லை. ஆயினும், இந்தத் தேர்தல் கடந்த இரண்டு ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அரசியற் செயற்பாடுகளின ஒருகருத்து வாக்கெடுப்பாகவே தமிழர்களிடையே அமையப்போகின்றது. "விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் வெறுக்கிறார்கள்"என மேறகொள்ளப்படும் பிரசாரத்தை முறியடிப்பதற்கான பாராளுமன்றத்தின் ஒரு கருத்து வாக்கெடுப்பாகவே இத்தேர்தலில தமிழரின் பிரதிநிதித்துவத்தை சகலரும் எதிர்பார்க்கிறார்கள் .

ஜனாதிபதி தமிழ்த்தேசியக்கூட்டணி ஒன்றுபட அவகாசம்வழங்கப்படக்கூடாது என திட்டமிடடிருக்கிறார். இது முறியடிக்கப்படவேண்டும் .இன்னமும வேகமாக கூட்டமைப்பு செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. முன்னரைப்போல தனி நபர்கஞகான விருப்பு வாக்களிப்பு இம்முறை இருக்ககூடாது. இதனாலேயே சில தனி நபர்கள் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றார்.(தி)

## இராசிபலன்

12. 02. 2004

(தை 29, வியாழக்கிழமை)

| | | |
|---|---|---|
| சஷ்டி | முற்பகல் 9.42 | மணிவரை |
| சுவாதி | பின்னிரவு 1.09 | மணிவரை |
| இராகுகாலம் | 2.04-3.34 | மணிவரை |
| சுபநேரம் | 8.04-9.34 | மணிவரை |

**மேடம்**
குடும்பத்தில் நல்லகாரியம், நண்பர்கள் சந்திப்பு,கீர்த்தி, தொழில் நன்மை.

**இடபம்**
சுவாரஸ்யம், பகைவர்நேசம், புதியமுயற்சி, உடல்நலம்.

**மிதுனம**
வியாபார நன்மை, சொத்துக்களால் கவலை, பிரயாணம்,பெரியோர்வெறுப்பு.

**கடகம்**
மனச்சோர்வு, கல்வியில் ஆர்வம, புதியசிந்தை, மாதாசுகம்.

**சிங்கம**
வரவேற்பு, தடைப்பட்டகாரியம் கைகூடும், தேகநலன், போசன நன்மை.

**கன்னி**
குடுமபக்கவலை,கௌரவக்குறைவு, காரிய தாமதம், பிரயாணம்.

**துலாம்**
பெருமையடைதல், உறவினர் கலந்துரையாடல், எடுத்தகாரியம் கைகூடும், தொழில் நன்மை.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, சுபசெலவு,சயனசுகக் குறைவு, பிரயாணம்.

**தனுசு**
பிறரது பாராட்டு, காரியநன்மை, நல்ல நிகழ்வு, விருந்துபசாரம்.

**மகரம்**
உற்சாகம், பெருமையடைதல், பிறருக்கு உதவி செய்தல், காரியசித்தி.

**கும்பம்**
சரீரப்பிரயாசை, முயற்சி தாமதம், அமைதிக குறைவு, இடமாற்றம்.

**மீனம்**
பிரயாணத் தடங்கல், மனத்தாங்கல், தொழில் கஷ்டம், காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# 130 தேவாலயங்கள் மீது இரு மாதத்தில் தாக்குதல்

(கொழும்பு)

கடந்த இரு மாதங்களில் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின பல பாகங்களிலும் 130 கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் அமைப்புகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிறிஸ்தவர்களின் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து, பிரசாரம் செயது வந்த பௌத்த துறவி கங்கொடவிலா சோமதேரரின் மறைவுக்குப் பின்னரே தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

ஆனால், மேற்படி சோமதேரர் மாரடைப்பால் காலமானதாக மருத்துவ அறிக்கைகள் அவரது சாவுக்கு காரணம் கூறினாலும், இவரது சாவுக்கு காரணம் கிறிஸ்தவர்கள் தான் எனப் பௌத்தர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். அத்துடன், அனுராதபுரத்தில் உள்ள கிறிஸ்தவ நிறுவனம் ஒன்றுக்கு தீ வைத்த சம்பவம் தொடர் பாக 3 பௌத்த துறவிகள், பேராசிரியர் ஒருவர் உட் பட 9பேர் கைது செய்யப்பட் டுள்ளமை குறிபபிடததக்கது (தி)

## மனைப்பொருள் கண்காட்சி

(கல்வயல்)

பளைப் பிரதேச செயலக தையல் மனைப் பொருட் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பளைப் பிரதேச செயலர் சி.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கண்காட்சி நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கா.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இக்கண்காட்சி தொடர்ந்து நாளையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-36)

# பணி நீக்கம் செய்யப்பட்ட
# அனைவருக்கும் மீண்டும் பணி
## ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

பணிநீக்கம்செய்யப்பட்ட அனைத்து அரச அலுவலர்களும் மீண்டும் பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று தமிழ்நாட்டு முத



லமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பதவி இறக்கம் செய்யப்பட்ட அரச அலுவலர்களுக்கான தண்டனை ரத்துச் செய்யப்பட்டு அவர்கள் வகித்திருந்த பதவியை மீண்டும் பெறுவார்கள் என்று கூறிய அவர், தமிழக அரசின் அனைத்து ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெப்ரவரி 1ஆம் திகதி முதல் 3சதவீதமாக விலைப்படி வழக்கப்படும் என்றும் அறிவித்தார்.

பல்வேறு அரச ஊழியர்கள் தாங்கள் திசைமாறி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் எனவே தங்கள் மீது கருணை காட்டவேண்டும் என்றும் என்னிடம் பலமுறை கோரிக்கைகள் விடுத்துள்ளனர். எனக்கு எப்பொழுதும் எவர் மீதும் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ பகைமையோ இருந்ததில்லை. எதிர்க்கட்சித் தலைவர்களின் தூண்டுதல்களாலேயே இவ்வாறு திசை மாறிப் போய் பாதிப்புக்குள்ளான ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச அலுவலர்களையும் மன்னித்து அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க வேணடும் என்று நான் கருதுகிறேன். பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரச அலுவலர்களும் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

தமிழக அரசின் அனைத்து ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெப்ரவரி 1ஆம் திகதி முதல் கணக்கிட்டு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார்.

தொகுப்பு ஊழியர் அடிப்படையில் நியமிக்கப்பட்ட அரசுப் பணியாளர்களுககும் இந்த அகவிலைப் படி உயர்வு கிடைக்கும் என்றார்.

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு நடப்பு நிதியாண்டுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய உள்ளூர் தலைவரி மற்றும் உள்ளூர் மேல் வரியை ரத்துச் செய்வதாகவும் அறிவித்தார்.

காவிரிநீரில் தமிழகத்துக்கு உரியபங்கை தமிழ்நாடு பெற்றே தீரும் என்று குறிப்பிட்ட அவர் காவிரி போன்ற பிரச்சினைகளில் தமிழ் நாட்டுக்கு நல்லது செய்யும் எண்ணம் காங்கிரஸ் கடசிக்கு இல்லை என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சி தனது கொள்கைகளை விட்டுக் கொடுத்து தி.மு.காவுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதை கொள்கை அற்ற கூட்டணி என்று முதலமைச்சர் விபரித்தார்.

இவர்கள் கூட்டணி கொள்கைக் கூட்டணியாகவே இருக்கும். தங்களது தலைவரைக்கொனறவர்களின் கூட்டணிகளோடு மட்டும் தான் இவர்கள் கூட்டு வைத்துக் கொள்வார்கள்.

சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்பபதற்காக அரசு எடுத்துள்ள பல்வேறு திட்டங்களையும் முதலமைச்சர் விபரித்தார்.

முதலமைச்சரின் பதிலுரைக்கு பா.ஜ.க உறுப்பினர் ஹெச் ராஜா, அகில இந்திய போர்வேட் புளக் உறுப்பினர் எம்.சந்தானம் ஆகியோர் நன்றி தெரிவித்த பின் தீர்மானம் நிறைவேறியது.

தமிழக சட்டப்பேரவையின் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதா தனனுடைய பதிலுரையைத் தொடங்கிய போது தி.மு.க, காங்கிரஸ், பா.ம.க, ம.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளியேறினார்கள். (து)

# தமிழ் நாட்டுக்கு நான் செய்ததென்ன?
## முன்னாள் மத்திய அமைச்சர் பாலு

(சென்னை)

மத்திய அமைச்சராகத் தான் பதவி வகித்த காலத்தில் 3700 வனத்திட்டங்களுக்கும் 169 சுற்றுச்சூழல் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கியிருப்பதாக முன்னாள் வனங்கள், மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ரி.ஆர்.பாலு கூறியுள்ளார்.

மத்திய அரசில் அங்கம் வகித்த தி.மு.க அமைச்சர்கள் தமிழ் நாட்டுக்கு எதையும் செய்யவில்லை என்று முதலமைச்சா ஜெயலலிதா கூறியிருப்பதை அவர் மறுத்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழக அரசு அனுப்பிய 79 திட்டங்களில் 60 திட்டங்களுக்குத் தான் அனுமதி வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடலோரப் பகுதிகளில் மாநில அரசுகள் கட்டடப் பணிகளை மேற்கொள்ளும் போது மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்தின் முன் அனுமதியைப்பெற வேண்டும் என்ற அறிவித்தலை உச்ச நீதிமனறத்தின் அனுமதியின் பேரில் தான் விலக்கிக் கொள்ள முடியும் என்றும் ரி.ஆர்.பாலு கூறினார். (து)

# தேர்தல் நடத்தை விதிமுறையில்
# கருத்தொற்றுமை அவசியம்
## அமைச்சர் கஸ்தூரி தெரிவிப்பு

(பெங்களூர்)

தேர்தல் நடததை விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதறகான காலம் குறித்து அரசியல் கட்சிகளிடையே கருத்தொற்றுமை உருவாக வேண்டுமென்று மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சர் கஸ்தூரி கூறியுள்ளாா.

பெங்களூரில் செயதியாளர்களிடம் பேசிய அவர் தேர்தல் நடத்தை விதிமுறைகளை இப்போதிருந்தே கடைப்பிடிக்கவேண்டுமென்று தலைமைத் தேர்தல் ஆணையர் கூறியிருப்பை சுட்டிக்காட்டியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அரசின் சாதனைகள் குறித்து இப்போது வெளிவரும் விளமபரங்கள் தேர்தல் நடத்தை விதிமுறைகளின் கீழ் வராது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசின் சாதனைகளை விளக்கும் விளமபரங்களை மத்திய அரசு வெளியிடுவதற்கு எதிராகக் கடுமையான விதிமுறைகளை வகுக்குமாறு தேர்தல ஆணையத்தை தி.மு.க. தலைவர் கருணாநிதியும் மாநில காங்கிரஸ் தலைவர் ஜீ.கே. வாசனும் வலியுறுத்தியுள்ளனர். (து)



ஈரான் பாம் நகரில் பிரிட்டிஷ் இளவரசர் சார்ல்ஸ்

## WORLD NEWS உலக தரிசனம்

# கருணாநிதி - சோனியா சந்திப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி நாளை சென்னையில் தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இதை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜி.கே.வாசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சுவதற்குமுன் சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்க வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள காமராஜர் சிலையை சோனியா காந்தி திறந்து வைப்பார் என்றும் வாசன் கூறினார். (து)

# தேர்தலில் பிரசார உத்திகள்.
## பா.ஜ.க. ஆலோசனை

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலில் மேற்கொள்ளவேண்டிய பிரசார உத்திகள் குறித்து மத்திய அமைச்சர்களின ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் புதுடில்லியில் பா.ம.க தலைவர் வெங்கையநாயுடு இல்லத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி உட்பட மத்திய அமைசசர்களும் கட்சியின் முக்கிய நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய வெங்கையநாயுடு அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்தும் பிரசார உத்திகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். (து)

# ஜெ.மீதான சொத்துக் குவிப்பு வழக்கு
## தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒத்தி வைத்தது

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்குகளை வேறு மாநிலத்துக்கு மாற்றும்படி கோரி அவர் தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு மனுமீதான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என்.வரியாவா, எஸ்.கே.சேமா ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு தீர்ப்பை ஒத்திவைத்தது.

முதலில் ஜெயலலிதா சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் எஸ்.கே.வேணுகோபால் காவிரிப் பிரச்சினை காரணமாக கர்நாடகத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராக விரோத மனப்பான்மை நிலவி வருவதால் அவரது பாதுகாப்பைக் கருதி வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

கர்நாடக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அல்லி அர்ஜுனா கர்நாடகத்தில் அத்தகைய மனப்பான்மை நிலவவில்லை என்றும் ஜெயலலிதா பெங்களூரில் வழக்குக்கு ஆஜராகும் போதெல்லாம் அவருக்குக்குப் பூரண பாதுகாப்பு வழங்க கர்நாடக அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட உச்ச நீதிமன்றம் பெஞ்ச் தீர்ப்பை ஒத்திவைத்தது. (து)

# காணாமல் போன "பீகிள் -2"
# கண்டுபிடிக்க அமெரிக்கா முடிவு

(கலிபோர்னியா)

செவ்வாய்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட, ஆனால் பூமியுடனான தொடர்பை முற்றிலும் இழந்துவிட்ட பிரிட்டனின் "பீகிள் -2" ரொபாட்டையும் அதைச் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறக்கச் சென்ற விண்கலத்தையும் தேடிக்கண்டுபிடிக்க அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

கடந்த டிசம்பரில் ஐரோப்பிய விண்வெளி ஏஜன்ஸியின் விண்கலம் செவ்வாய்கிரகத்துக்கு அனுப்பப்பட்டது. அதில் பிரிட்டனின், "பீகிள் -2" ரொபாட் அனுப்பப்பட்டது கிறிஸ்மஸ் நாளான டிசம்பர் 25ஆம் திகதி அதைச் செவ்வாய்க் கிரகத்தில் இறக்க திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் அது பூமியுடனான தொடர்பை முற்றாக இழந்துவிட்டதால் அம் முயற்சி நிறைவேறவில்லை. (து)

# வீரப்பன் விரைவில் கைது
## கர்நாடக முதல்வர் அறிவிப்பு

(பெங்களூர்)

சந்தனக் கடத்தல் வீரப்பன் தப்பிவிட முடியாதபடி தமிழக - கர்நாடக அதிரடிப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாகக் கர்நாடக முதலமைச்சர் எஸ்.என். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.



பெங்களூரில் நிகழவொன்றில் பேசுகையில் இதனைக் கூறினார். வீரப்பன் தொடர்பான நல்ல செய்தி ஓரிரு தினங்களில் கிடைக்குமென்று அவர் குறிப்பிட்டார்.

வீரப்பனைப் பிடிக்கும் விவகாரத்தில் தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்குமிடையே கருத்து வேறுபாடு எதுவும் இல்லை என்றும் கிருஷ்ணா கூறினார். (து)

# வளர்ச்சிப் பணியில் அரசியல்
# தலையீடு கூடாது - வாஜ்பாய்

(புதுடில்லி)

வளர்ச்சிப் பணிகளைச் செயற்படுத்தும் போது அரசியல் குறுக்கிடக் கூடாது என்று பிரதமர் அடேல் பிஹாரி வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

பீஹாரில் வைவிலியில் ரயில் திட்டமொன்றிற்கு அடிக்கல் நாட்டிப் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சித் திட்டஙகளை செயற்படுத்தும் போது அரசியல் கட்சிகள் தங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளை மறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தியப் பொருளாதாரம் தற்பொழுது நல்ல நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்ட பிரதமர் வளர்ச்சியும் வளமும் நம் நாட்டின் மீது தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்று கூறினார். (து)

# காவிரித்தண்ணீர் பிரச்சினை
# பேச்சுக்கு வாய்ப்பில்லை
## நிதி அமைச்சர் பொன்னையன் அறிவிப்பு

(சென்னை)

காவிரிப்பிரச்சினை குறித்துக் கர்நாடகத்துடன் பேச்சுக்கள் நடத்த வாய்ப்பு இல்லையென்று நிதி அமைச்சர் பொன்னையன் தெரிவித தார்.

நதிமன்றம் மூலமாகவோ காவிரி நடுவர்மன்றம் மூலமாகவோ தான் இப்பிரச்சினைக்குத் தீவுகாண முடியும் என அவர் உறுதிபடக் கூறினார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது நடந்த விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய போதே அவர் இவ்வாறு சொன்னார்.

விவாதத்தில் கலந்து கொண்ட தி.மு.க. உறுப்பினர் துரைமுருகன் பேசுகையில் ஆளுநர் உரையில் காவிரிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிடப்படாமைக்கு அரசைக் குறை கூறினார்.

பரம்பிக்குளம்-ஆழியாறு ஒப்பந்தம் குறித்து எதிர்க்கட்சியினருக்குத் தெரிவிக்கவில்லையென்று துரைமுருகன் கூறிய போது குறுக்கிட்டுப்பேசிய நிதியமைச்சர் பொன்னையன் இவ்விடயம் குறித்து இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்,மேலும் ஒரு சுற்றுப் பேச்சு நடத்தப்படுமென்றார்.

விவாதத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் உ றுப்பினர் பாலசுப்பிரமணியம் பேசுகையில், பேச்சுக்கள் மூலமாகவே காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று கூறினார்.

விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் க.அன்பழகன் காவிரிப் பிரச்சினைக்கு நீதிமன்றம் மூலமாகத்தான் தீவுகாண வேண்டும் என்றகருத்தை தி.மு.க, அ.தி.மு.க கொண்டிருந்தாலும் சில நிவாரணங்களைப் பெறப் பேச்சுவார்த்தை மூலம் பரஸ்பரம் பேச்சுக்கள் நடத்துவதில் எவ்விதமான தவறும் இல்லையெனக் குறிப்பிடடார். (து)

# முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து பேசமுயன்றும் முடியவில்லை

## தே.ஐ.மு. செயலாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களின் பிரச்சினைகள், உரிமைகள், சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் 3ஆம் தரப்பாகக் கலந்துகொள்ளல் என்பன குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் கலந்துரையாட பல தடவை முயற்சித்தோம்.

ஆனால், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அதற்கு இணங்கவில்லை. இது எமக்கு பெரும் கவலையைத் தருகிறது.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சேகு இஸதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும் 'விடியும்வேளை' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு சரிக்குச் சரி முஸ்லிம்களும் வாழ்கின்றார்கள். அவர்களும் கௌரவமான ஓர் இனம். இந்நிலையில் அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏன் தயங்குகின்றது? முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் சமாதானப் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள் கலந்துகொள்ள வேண்டும் என்பதை ஏன் கூட்டமைப்பு நிராகரிக்கின்றது?

எமது இத்தகைய கேள்விகளுக்குப் பதிலளிக்காது ஏன் கூட்டமைப்பு மௌனம் சாதிக்கின்றது? அல்லது நாங்கள் கேட்கும் கேள்விகள் இக்கூட்டமைப்பிற்கோ தமிழீழ விடுதலைப்புலிகளுக்கோ காதில் விழவில்லையா?

முஸ்லிம்கள் தமது சகோதர இனம் எனக் கூறிக்கொண்டு, அவர்களின் உரிமைகளை நசுக்கிவிட முயலும் கூட்டமைப்பினரைவிட, இனவாதம் பேசி வந்த ஜே.வி.பிக்கு நல்ல மனப்பான்மை இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

சிங்கள சமூகத்திற்காக மட்டும் குரல் கொடுத்து வந்த மக்கள் விடுதலை முன்னணி இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டிணைந்து தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வந்திருக்கின்றது. அது மட்டுமின்றி, தமிழ்,முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சகல கட்சிகளுடனும் பேசத தயார் எனவும் கூறுகின்றது.

விடுதலைப்புலிகளை விமர்சித்து வந்த ஜே.வி.பி. இன்று அவர்களுடனும் பேச முன்வந்திருக்கின்றனர். இதனாலேயே ஜே.வி.பி. - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டிணைந்தமைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் சில தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள பலர், நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்ததாகக் கூறி எமது கட்சியை கடுமையாக விமர்சித்திருந்தார்கள்.

தாங்களும் ஒற்றுமையாக வாழாது மற்றவர்களையும் ஒற்றுமையாக வாழ விடாத இவர்களின் விமர்சனங்களைக் கண்டு நாம் அஞ்சவில்லை.

எமக்குத் தேவையானது முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதுதான். இதற்காக நாம் எந்தக் கட்சியுடனும் பேசுவதற்குத் தயாராக உள்ளோம்.

அத்துடன் நாம் அதிகார வெறியில் பதவி மோகமும் கொண்டவர்கள் அல்ல. இதனை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எமது மக்களுக்காக பதவியைத் துறக்க வேண்டி வந்தாலும் நாம் அதைச் செய்வோம்.

இது ஒருபுறம் இருக்க, நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேரவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளிவந்தன.

நாம் அவ்வாறு கூட்டுச் சேர்வதற்கு இன்றும் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனிதது நின்று போட்டியிடவே தயாராகி வருகின்றது.

உண்மையிலேயே வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் சகல முஸ்லம் கட்சிகளும் ஒன்றாக இணைந்தே போட்டியிட வேண்டும். இதன் மூலம் முஸ்லிம்களின் பலத்தை வெளிப்படுத்த முடியும்.

கடந்த தேர்தலின் போது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 4 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிட்டது. இதன் மூலம் அதிக வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பும் அதற்குக் கிடைத்தது.

அத்துடன் தமிழ் மக்களின் பலமும் அதிகரிக்கப்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரே குரலில் கூறி அதற்கான தீர்வைப் பெறக்கூடியதாகவும் இருந்து.

தற்போது இக்கூட்டமைப்பு மலையகக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு போட்டியிட உள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனவே என்னைப் பொறுத்தவரையில் கட்சிகள் அனைத்தும் தனித்தனியாகப் போட்டியிடுவதைவிட, கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது அதிக நன்மைகளைத் தரும் என்றே கருதுகிறேன்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மீதான வழக்கு விசாரணை ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

பிரிந்துபோன சுபைதீன் தலைமையிலான குழுவுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும இடையிலான வழக்கில் நிரந்தரமான தடை உத்தரவு நீக்கப்பட்டால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபடும் அபாயமும் இருக்கின்றது என்றார்.

(தி-60,10)

# ஜனாதிபதியின் செயற்பாடுகளால் நாட்டுக்கு பெரும் பின்னடைவு

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய இணக்கப்பாடுகள் ஏற்படும் தருணத்தில், பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி அதனைச் சீர்குலைத்துவிட்டார் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

தடைப்பட்டிருந்த சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் உடன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் பலதரப்பட்டோராலும் மேற்கொள்ளப் பட்டுவந்தன.

ஆயினும் அவற்றை எல்லாம் உடைத்தெறிந்து சமாதான முயற்சிகளை முறியடிக்கும் ஓர் பாரிய செயற்பாடாகவே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார். அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ம் திகதி பொதுத்தேர்தல் ஒன்றும் நடைபெறுமென அறிவித்துள்ளமையும் ஓர் சீரற்ற நிலைமையையே எடுத்துக் காட்டுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டமைப்புக்கு அதிக பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே தேர்தல் நடாத்தப்படவுள்ளது. இத்தேர்தல் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை என வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-18)

# யாழ்.தொ.நுட்ப கல்லூரியில் சிற்றி அன் கில்ஸ் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியில் மிக விரைவில் சிற்றி அன் கில்ஸ் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலண்டன் சிற்றி அன் கில்ஸ நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் இணைவதற்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியற் துறையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை நாளை வெள்ளிக்கிழமை யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் இப்பயிற்சி நெறியைவிட மேலதிகமாக சர்வதேச டிப்ளோமா ஆசிரியப் பயிற்சி நெறி மற்றும் அழகியல்துறை உயர் டிப்ளோமா பயிற்சிநெறி ஆகிய இரு கல்வி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகள் அனைத்துக்குமான விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் என்பன யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படும். அதே வேளை பரீட்சை வினாத்தாள்கள் இலண்டனுக்கு அனுப்பப்பட்டு அதன் பெறுபேறுகளுக்குரிய சான்றிதழ்கள் அங்கிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-19)

# வாடியடி வைத்தியசாலை வசதியீனங்கள் மத்தியில்

(தொல்புரம்)

பூநகரி வாடியடியில் உள்ள மக்கள் தமது வைத்தியசேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வழிவகைகள் இல்லாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவருகின்றது.

கடந்த 100 வருட காலமாக அப்பகுதி மக்களுக்குச் சேவைகளை வழங்கி வந்த பூநகரி வாடியடி வைத்தியசாலை, கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையால் முற்றாகத் தரைமட்டமாகியுள்ளது.

இவ் வைத்தியசாலையை மீளப்புனரமைப்புச் செய்து தருவதுடன் வைத்தியர்களுக்குரிய விடுதிகளை வைத்தியசாலை வளவினுள் அமைத்துத் தருமாறும் யாழ்.மாவட்ட நலன்புரிச் சங்கம் சுகாதார அமைச்சிடம் வேண்டுகோள விடுத்துள்ளது.

இதேவேளை மேற்படி வைத்தியசாலை தனியார் கட்டடம் ஒன்றில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் தற்போது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தி-70)

# நியாயமான தேர்தலை நடத்த கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நீதியாகவும் நியாயமானதாகவும் நடத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளினதும், தலைவர்கள் உச்சக் கட்ட ஆதரவை வழங்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் சம்பந்தமான சட்டங்களையும், பிரமாணங்களையும், நடைமுறைக்கு இடும் முழுப் பொறுப்பும் பொலிசாருக்கு இருப்பதால், பொலிசார் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும்.

அவ்வாறானால்தான் தேர்தலை நீதியாகவும் நியாயமானதாகவும் நடத்தலாம்

தேர்தல் சம்பந்தமான விடயங்களில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் துஷ்பிரயோகம் இடம் பெற்றால் தேர்தல் பெறுபேறுகளை இரத்துச் செய்வதற்கான அதிகாரமும் என்னிடம் உள்ளது.

தேர்தலின் போது இடம்பெறும துஷ்பிரயோகம், வன்செயல்கள் என்பவற்றை முற்றாகத் தடுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு ஒன்று விரைவில் உருவாக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-60,10)

# கந்த புராணப் படிப்பு ஆரம்பம்

(பருத்தித்துறை)

தென்புலோலி சின்னத்தாய் விநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப்படிப்பு கடந்த 7ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி திருக்கலயாணம் நடைபெறவுள்ளதுடன் 29ஆம் திகதி அன்னதானமும், மறுநாள் வைரவர் மடையும் நடைபெறவுள்ளன.

(தி-52)

# சிவராத்திரி விரதம்

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டியம்பதி ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி சிவராததிரி விரதபூஜைகள் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன.

அத்துடன் மறுநாள் காலை இடம்பெறும் விசேட அபிடேக ஆராதனையைத் தொடர்ந்து பண்டைய காலம் தொட்டு சிதம்பரத்தில் நடைபெறுவது போன்று வசந்தன் கம்பு (கோலாட்டம்) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-70)

# அமைச்சரிடம் கோரிக்கை

(தொல்புரம்)

சென்றவருடம் பூநகரிப் பகுதியில் தபால் சேவகர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவில்லை. இக்குறையை நிவர்த்தி செய்யுமாறு யாழ். மாவட்ட அபிவிருத்தி சங்கத் தலைவர் தபால் தந்தித் தொலைத்தொடர்பு அமைச்சரைக் கோரியுள்ளார். (யே-70)

# அடிக்கல் நாட்டு விழா

(மருதங்கேணி)

கரைச்சி பிரதேச சபைத் தலைமைச் செயலகத்திற்குப் புதிய இருமாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி பழைய பொதுச் சந்தை வளாகத்தில் இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

கரைச்சி பிரதேச சபைக்கான இப்புதிய இரண்டு மாடிக் கட்டடம் 9.5 மில்லியன் ரூபா நிதி செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-35)

# காவல்துறையினர் கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

முள்ளியவளைப் பிரதேசத்தில் முள்ளியவளை காவல் துறையினர் தொடர்ச்சியாக வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். முள்ளியவளை பிரதான வீதி புனரமைப்பு மேற்கொண்ட பின்னர் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த சிறு சிறு வீதி விபத்துக்களை அவதானித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் வீதி ஒழுங்கு குற்றத்தடுப்பு சட்ட நடவடிக்கை, சமூக சீர்திருத்தம் போன்ற விடயங்கள் தொடர்பாக பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மக்களுடன் கலந்துரையாடி விளக்கமளிக்கப்பட்டு வருவதுடன், மக்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் கேட்டறிந்து தீர்வுகளும் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. முள்ளியவளை பிரதேச காவல் துறைப் பொறுப்பதிகாரி க.கணேசமூர்த்தி தலைமையில் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. (யே-43)

# பாடசாலை இயங்கவில்லை

(தொல்புரம்)

பூநகரி செட்டியாகுறிச்சிப் பாடசாலை 150 வருடங்களுக்கு மேலாக தொன்மை வாய்ந்தது. பூநகரி பகுதியில் 21 கிராமங்களை ஒன்றிணைத்து இப்பாடசாலை ஒன்றே ஆரம்பத்தில் இயங்கி வந்தது.

யுத்த அனர்த்தத்தினால் தரை மட்டமாக்கப்பட்ட இப்பாடசாலை இதுவரை இயங்கவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(யே-70)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு தொடரின் 65வது சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறும.

(யே)

# ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் அமளிதுமளி

## பிரதமருக்கு நெருக்கடிநிலை

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்கள் குழுக்கூடடத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில்,

பிரதமரின் ஊடகப் பிரிவு பொதுவான நிதி ஒதுக்கீட்டை நிதி அமைச்சின் ஊடாக தமக்கு வழங்கவில்லை என பல அமைச்சர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் குற்றம் சாட்டினார்.

பொதுவான நிதிஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் தமது நடவடிக்கைகளை தத்தமது தேர்தல் தொகுதிகளில் மேற்கொள்ள முடியாதுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவித்தார்கள்.

இதனால் தமது தொகுதிகளில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதில் பல பிரச்சினைகள ஏற்பட்டதாக ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள்.

இத்தகையதொரு நிலையில மக்களுக்கு தம்மால் எதனையும் எடுத்துக்கூறமுடியாத நிலை காணப்படுவதாகவும் பிரதமரிடம் அவர்கள் முறையிட்டார்கள். இதற்கிடையில் எதிர்வரும தேர்தலில் தாம் பங்கேற்கப்போவதிலலையென சில அமைச்சர்களும், பிரதிஅமைச்சர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியாக தெரிவித்தனர்.

இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. (தி-60,10)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 52 உபதபால் அதிபர் வெற்றிடம்

(தொல்புரம்)

யாழ்.மாவட்டத்தில் 52 உப தபால் அதிபர்கள் வெற்றிடங்கள் உள்ளன. இப்பதவிக்கு இது வரை பலர் விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த ஒரு வருடகாலத்திற்கு மேலாக உப தபால் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சையும் நடைபெற்றது.

இதன் மூலம் 19 பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இது வரை நியமனம் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு துரித கெதியில் நியமனத்தை வழங்குமாறு யாழ். மாவட்ட அபிவிருத்தி நல உரிமைகள் சங்கத்தலைவர் முன்னாள் தபால் தொலைத்தொடர்பு அமைச்சரிடமும் தற்போதைய அமைச்சாடமும் கோரிக்கை விடுத்துள்ளார். (யே-70)

# மக்கள் சுதந்திர முன்னணியில் சமசமாஜக்கட்சி இணையாது

## பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் அறிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும் ,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியல் லங்கா சமசமாஜக்கட்சி இணையாது என கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில, கட்சியின் அரசியல் குழு எடுத்த இந்த தீர்மானத்திற்கு மத்திய செயற்குழு அனுமதியளித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம்வகிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இனப்பிரச்சினை தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருப்பதன் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீ.சு.கட்சியும், நாங்களும் இருக்கிறோம். ஆனால் ஜே.வி.பியினர் இதற்கு எதிராகவுள்ளனர்.

ஆயினும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, இந்த முன்னணி எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் ஆதரவு வழங்கப்போவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் பொது ஜன ஐக்கியமுன்னணியின் அங்கத்துவக்கட்சி என்ற ரீதியில், கட்சி தொடர்ந்தும் செயற்படும் என அவா மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# தொழிற்சங்க கூட்டமைப்பின் போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தொழிலை முடிவுறுத்தும் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நஷ்டஈட்டுக் கொடுப்பனவு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பினர் மேற்கொண்டுவந்த உண்ணா விரதப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சுக்கு முன்னால் கடந்த 24 நாள்களாக நடைபெற்றுவந்த இவ் உண்ணா விரதப் போராட்டத்தை ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கக் கூட்டமைபபின் செயலாளர் எஸ். அமரசிங்க முடித்து வைத்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து தங்களது கோரிக்கைகள் தொடர்பாக உரியதரப்பினருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்பட முடியாத காரணத்தால் போராட்டம் கைவிடப்பட்டது. (தி-61)

# யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நேற்று அரசியல் பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொன்றாட் அடினோர் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் அரசியல் பயிற்சி நெறி ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இவ் வைபவத்தில் கொன்றாட் அடினோர் பவுண்டேசனின் இலங்கைக்கான வதிவிடபிரதிநிதியான கலாநிதி றெலேசா ஸ்ரென் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்துவைத்தார்.

கல்லூரி அதிபர் நா. யோகராஜன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், கொன்றாட் அடினோர் பவுண்டேசனின் திட்ட அலுவலர் துஷாரா வன்னயராச்சி, தேசிய அக்கடமியைச் சேர்ந்த எம்.எஸ்.ரி. சேனநாயக்கா, சர்வதேச தமிழீழ மாணவ பேரவையின் தலைவா் எஸ். கஜேந்திரன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு கொன்றாட் அடினோர் பவுண்டேசனின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி றெலேசா ஸ்ரென உரையாற்றும்போது,

ஜேர்மனியில் ஜனநாயகம் அறவே ஒழிந்ததன் காரணமாக சர்வாதிகாரம் மேலோங்கியது. இதனால் நாடு சிதைவுற்றது, பொருளாதாரம் மிகவும் கீழ் நிலைக்கு வந்தது, இந்நிலையில் ஜேர்மனி கற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு உழைத்து பாடுபட்டு ஜனநாயகத்தினை இன்று நிலை நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஜனநாயகம் மனித உரிமைகள் பற்றி அறிவு நிலையை மேம்படுத்தும் வகையில் எமது நிறுவனம் உலகின் பல நாடுகளில் சேவை செய்து வருகின்றது.

யுத்தத்தினால் சீரழிந்த நிலையில் உள்ள யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் பற்றிய புரிந்துணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றைய தேவையாகவுள்ளது.

அந்த வகையில் இந்த அரசியல் பயிற்சி நெறி மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எமக்கு பரிபூரண நம்பிக்கை உள்ளது.

ஜனநாயகம் என்பது தனி மனித சுதந்திரம், அரசியல் சுதந்திரம் என்பவற்றினை கடந்ததாகும். ஜனநாயகம் உயிர் உள்ளதாக இருக்கும் போது தான் அதன் பண்புகள் காப்பற்றப்படும் என்றார்.

இவ்வைபவத்தில் சர்வதேச தமிழீழ மாணவ பேரவையின் தலைவர் எஸ்.கஜேந்திரன், உப அதிபர் அலோசியஸ், ஆங்கில விரிவுரையாளர் எஸ். ஜெயராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (தி-16)

ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால்

# ரயில்வே அதிகார சபைக்கு ஆறு கோடி ரூபா நஷ்டம்

(கொழும்பு)

கடந்த இரு வார காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த ரயில்வே ஊழியர்களின் போராட்டம் காரணமாக ரயில்வே அதிகார சபைக்கு ஆறு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ள்தாக அதிகார சபையின் பொது முகாமையாளர் பிரியால் டி.சில்வா தெரிவித்துள்ளார்.

ரயில்வே அதிகார சபையைத் திணைக்களமாக மாற்றக் கோரி,ரயில்வே ஊழியர்கள் கடநத 26ஆம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொண்டு வந்தனர். அக்காலப் பகுதியில் ரயில்சேவைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இதனால்,அவ் இருவார காலத்தல் ரயில்வே அதிகார சபைக்கு வருமானமாகக் கிடைக்க விருந்த சுமார் ஆறுகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது. அத்துடன், நாளாந்தம் ரயில்வே அதிகாரசபைக்குக் கிடைக்கும் 4 மில்லியன் ரூபா வருமானமும் கிடைக்காமல் போயுள்ளது.

இதேவேளை, அனைத்து ரயில்வே ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்குவதறகு நாளாந்தம் 7மில்லியன் ரூபா நிதி செலவிடப்படும் நிலையில், அவ் ஊழியாகள் வேலை நிறுத்தம் மேற்கொண்ட காலத்திலும் அவா் களுக்குச் சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப் படவேண்டியுள்ளது.

இதனால்,ரயில்வே அதிகார சபைக்குப் பாரிய நஷ்டம் ஏற்படடுள்ளதுடன்,பல்வேறு வருமானங்களையும் இழக்க நேரிட்டுள்ளது என பிரியால டி.சில்வா மேலும் கூறியுள்ளார். (தி-18)

## பொதுக்கூட்டம்

(அளவெட்டி)

ஏழாலை மகாவித்தியாலயத்தின் அபிவிருத்தி சபைப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை பி.ப.1.00மணிக்கு பாடசாலை அதிபர் அ.நடராசாசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-83)

## ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த வவுனியாவுக்கான ரயில்சேவை வழமைக்கு திரும்பியிருப்பதாக ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை வவுனியாவுககான ரயில்சேவை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இதேவேளை மலையக பகுதிகளுக்கான ரயில் சேவைகள் தவிர்ந்த ஏனைய ரயில் சேவைகள் கால அட்டவணைக்கு அமைய இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(தி-61,10)

## விற்பனை நிலையம் திறப்பு

(வடலியடைப்பு)

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத்தின் விசேட விற்பனை நிலையமென்று இளவாலை உயரப்புலம் பகுதியில் கடந்த 5ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெருமளவு மக்கள் அப்பகுதியில் மீளக் குடியேறியதைத் தொடர்ந்து அப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் மேற்படி விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.(தி-21)

## சான்றிதழ்வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் "முயற்சி" திறன் விருத்தி மையத்தால் நடாத்தப்பட்ட தொழில் பயிற்சிகளில் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10.00மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 2002/2003 ஆம் ஆண்டுகளில் முயற்சி பயிற்சி நிலையத்தில் மின்னிணைப்பும் மீள் முறுக்கலும், தொலைக்காட்சி,வானொலி திருத்துதல், தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து, நவீன உடையமைத்தல், புத்தகம் கட்டுதல் ஆகிய பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்ற 350 இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

நிறுவனத்தலைவர் அ. நல்லதம்பி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, சட்டத்தரணியும் அகில இலங்கை சமாதான நதிவானுமாகிய மா.தியாகராஜா பிரதமவிருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.(யே)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இன்று வியாழக்கிழமை முதல் 4 நாட்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தினமும் காலை 9.00 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை, மு.ப. 11மணிமுதல் -ந.ப. 12.30 மணி வரை,பி.ப.2.முதல் பி.ப. 3 மணிவரை முறையே இன்று வியாழக்கிழமை கோண்டாவில் மததிய கிராம முன்னேற்றச் சங்கம்,கோண்டாவில் ஸ்ரீநாராயணன் சனசமூகநிலையம். கலைவாணி சனசமூகநிலையம் ஆகியவற்றிலும,நாளை வெள்ளிக்கிழமை ஞானஒளி சனசமூகநிலையம், குமரகோட்டம் சனசமூக நிலையம்,ஸ்ரீகணேசா சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் வைத்து இந்த தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதேபோன்று,எதிர்வரும் 16ஆம்திகதி அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம், ஞான வீரா சனசமூகநிலையம், வேத பாராயணசனசமூக நிலையம் ஆகியவற்றிலும், எதிர்வரும்17ஆம்திகதி அமரகவி சனசமூகநிலையம்,மஞ்சத்தடி விவேகானந்தா சனசமூக நிலையம். உதயசூரியன் சனசமூக நிலையம ஆகியவற்றிலும் வைத்து இத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதென. கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (தி-18)

## விண்ணப்பம்கோரல்

(மருதங்கேணி)

மாவட்ட செயலர் பதவிகள் மற்றும் அரச அதிபர் பதவிகள் ஆகியவற்றுக்கு தகுதியானவர்கள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை தகுதியானவர்களிமிருந்து உளநாட்டு அலுவலகள் மாகாண சபைகள் உளளூராட்சி அமைச்சுச்செயலாளர் கோரியுள்ளார்.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிர்வாக சேவை தரம் 1-ல் எட்டு வருடங்களுக்கு குறையாத சேவைகளை பூர்த்தி செய்தவர்களாகவும் கடந்த 5ஆண்டு காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருக்காதவர்களாவும் இருத்தல்வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-35)

## சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.மார்ச்-8ல் நடைபெறும் இந்நிகழ்வில் கிராம மட்டப்பெண்கள் ஆற்றுகை செய்யும் நாடகங்கள் துறைசார் வல்லுநர்களின் கருத்துரைகளும்,பெண்கள் அபிவிருத்தித்திட்ட உத்தியோகத்தர்கள் வழங்கும் கவிதா நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (யே)

# குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் ஆசிரியர்களே

விவாத அரங்கு

மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்
**ஆசிரியர்களா?**
**மாணவர்களா?**
**பெற்றோர்களா?**
என்ற தலைப்பில் "ஆசிரியர்களே" காரணமென சாடுகிறார் கலைப்பிரியன்.

**கலைப்பிரியன்**

வலம்புரியின் விவாத அரங்கில் குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணமானவர்கள் ஆசிரியர்களா? மாணவர்களா? பெற்றோர்களா? என்ற தலையங்கம் தரப்பட்டதிலிருந்து பலரும் பலவிதமான கருத்துக்களை ஆசிரியர்கள் மீதும், மாணவர்கள் மீதும், பெற்றோர்கள் மீதும் காரணம் காட்டி எழுதியுள்ளனர்.

நான் ஆசிரியனாக இருந்து ஓய்வுபெற முன்பும், ஓய்வுபெற்ற பின்புமாக 40 வருடகாலத்தை ஆசிரியப்பணிக்கு அர்ப்பணித்திருந்த போது, நான் பெற்ற அனுபவத்தில் குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைபவர்கள் ஆசிரியர்கள் தான் என எனது விவாதத்தின் கருப்பொருளாக எடுத்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயின்று வெளியேறும் ஆசிரியர்கள் தமது பயிற்சிக் காலத்தில் பல பாடங்களை அறிவும், ஆற்றலும், அனுபவமும் மிக்க ஆசிரியர்களிடம் கற்கின்றனர். குறிப்பிட்ட பாடங்களோடு உளநூலும் மிக முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றது. இதைப் படிப்பிப்பதன் அவசியம் என்ன? மாணவர்களின் உள்ளத்தைப் புரிந்து அதற்குத் தக தன் கடமையைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். ஒரு வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் திறமையுள்ளவர்களாகவோ அல்லது திறமையற்றவர்களாகவோ இருக்கமாட்டார்கள். போர்க்காலச் சூழ்நிலையின்போது சொந்த இடத்தை விட்டுப் புலம்பெயர்ந்து அயல் கிராமங்களில் காலையில் ஓர் இடத்திலும் மாலையில் வேறோர் இடத்திலுமாகப் பல கஷ்டங்களின் மத்தியில் வாழும் மாணவர்களின் நிலைப்பாட்டையும், உளப்பாட்டையும் உணர்ந்து கற்பிக்க வேண்டும். பாடங்களை ஒருமுறை விளக்கியதோடு நிறுத்திவிடாமல் மீண்டும் ஒருமுறையோ இருமுறைகளோ விளங்கவைப்பதால் பெரும்பான்மையான மாணவர்கள் விளங்கிக் கொள்வர்.

'நான் ஒருமுறையோ, இருமுறையோ விளங்கவைத்தும் விளங்கிக் கொள்ளாத மாணவர்கள் வெட்கப்படாமல் கேட்டால் மேலும் பலமுறை விளக்கி உங்களை விளங்கவைக்கிறேன். தேவையில்லாமல் அநாவசியமாகத் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பெற்றோரின் பெருந்தொகைப் பணத்தை அள்ளி இறைக்க வேண்டாம்' என்று சொல்லக்கூடிய ஆசிரியர்கள் யாரும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. தன்னுடைய பாடத்தை எங்காவது படித்துத் திறமைச் சித்தியோ, அதிதிறமைச் சித்தியோ அடைந்தால் தனக்குத்தானே பேரும், புகழும், பெருமையும், பாராட்டும் கிடைக்கிறது என்றுதான் எண்ணுகின்றனர்.

6ஆம் வகுப்பில் இருந்து உயர்தர வகுப்புவரையும் கற்கும் மாணவர்களில் பெரும்பான்மையானோர் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்கின்றனர்.

ஆசிரியர்கள் மாணவர்கள் நன்கு புரிந்து விளங்கக்கூடியதாகக் கற்பித்தால் எந்தவொரு மாணவனோ, மாணவியோ தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்கவேண்டும் என்று விரும்பமாட்டார்கள். ஆசிரியர்களின் கற்பித்தல் தவறுதான் இதற்குக் காரணமாக அமைகின்றது.

தரம் குறைந்த மாணவர்களையும் தரமுடையவர்களாக உயர்த்த வேண்டும் என்ற பரந்த சேவை மனப்பான்மையோடு கற்பிக் கும் ஆசிரியர்கள் பாடசாலை முடிந்த பின் ஒரு மணித்தியாலமோ, அல்லது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சில மணித்தியாலங்களோ, அல்லது விடுமுறை நாட்களில் வாரத்தில் இரண்டு, மூன்று நாட்களோ மாணவர்களை வரவழைத்துக் கற்பிப்பார்களேயானால், அமைதியான சூழ்நிலையில் ஆசிரியர்கள் கற்பிப்பதை அவதானித்து விளங்கிக்கொள்வது மாணவர்களுக்கு இலகுவாக இருக்கும். அத்துடன், அப்படித் தன்னலம் கருதாமல் சேவை செய்யும் ஆசிரியர்கள் மீது மாணவர்கள் அளவு கடந்த அன்பும், பற்றும், பணிவும், பாசமும் கொண்டு தெய்வமாக மதிப்புக் கொடுத்துப் போற்றி வணங்குவர். இப்படியான கடமையுணர்ச்சியோடு எல்லா ஆசிரியர்களும் தங்கள் பணியை முழு மனதுடனும், விருப்புடனும் 'செய்யும் தொழிலே தெய்வம் அதன் திறமைதான் நமக்குச் செல்வம்' எனக்கருதி ஊன்றிச் சிந்தித்துச் செயற்படுவார்களேயானால் பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்துத் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்களின் தொகையை முழுமையாக இல்லாவிட்டாலும் கணிசமான அளவு குறைத்துக் கொள்ளலாம்.

20 பிள்ளைகள் படிக்கும் வகுப்பில் 10 பிள்ளைகள் சித்தியடைய மற்றப் 10 பிள்ளைகளும் சித்தியடையாமைக்கு ஆசிரியர்கள்தான் காரணம். குறிப்பிட்ட பாடத்திற்குப் பொறுப்பாக உள்ள ஆசிரியர் மாணவர்கள் இலகுவில் விளங் கக்கூடியதாக மாணவன் வேறு வழிகளில் புலன்களைச் சிதற விடாமல் ஒருவழிப்பட்டு பாடத்தை நுகரக்கூடிய முறையில், கவரக்கூடிய முறையில் முழுவிருப்போடும் முழு மனதோடும் அலுப்பின்றிப் பலமுறை விளக்குவாரேயானால், எல்லா மாணவர்களும் சித்தியடைய ஏதுவாகும். தான் கற்பிக்கும் பாடத்தில் போதிய அறிவும், அனுபவமும், ஆற்றலும், ஆசையும் இல்லாத ஆசிரியர்களின் வேண்டா வெறுப்பான கற்பித்தலினால் போதிய அறிவைப் பெற முடியாத மாணவர்களில் பணவசதியுள்ளவர்கள் தனியாரிடமோ, தனியார் கல்விநிறுவனங்களுக்கோ சென்று பெருந்தொகையான பணத்தைச் செலவழித்துப் படித்துச் சித்தியடைகின்றனர். பணவசதி அற்ற மாணவர்கள் தனியாரிடமோ, தனியார் கல்வி நிறுவனங்களிலோ சென்று கற்கமுடியாத நிலையில் பாடசாலை ஆசிரியர்களின் படிப்பித்தலோடு மட்டும் நிற்பதால் சித்தியடைய முடியாமல் கோட்டை விடுகின்றனர். அதனால் மாணவனின் அலட்சியமும் கவனக்குறைவும் தான் காரணம் என்று சொல்லுவதற்கில்லை.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு ஏன் மாணவர்கள் படையெடுக்கின்றார்கள் என்ற கேள்விக்கு விடையென்ன. அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் குறித்த பாடத்தில் முழுமையான அறிவைப் பெற்றுப் பலவகையாக விளங்க வைத்து மாணவர்கள் இலகுவாகப் புரிந்து கொள் ளக்கூடியதாக ஒரு முறைக்குப் பலமுறை திருப்பித் திருப்பி விளக்குவதால் மாணவர்களுக்கு அவர்களின் கற்பித்தலில் கவர்ச்சியும் ஆசையும் உண்டாகின்றது. அதனால் பல மைல் தொலைவில் இருந்தும் பல சிரமங்களையும் பாராமல் சென்று கற்கவிரும்புகின்றனர். பாடசாலைகளிலோ, கல்லூரிகளிலோ கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏன் அப்படிக் கற்பிக்கிறார்கள் இல்லை. அப்படிக் கற்பிக்காத காரணத்தால் தான் பாடசாலை நாட்களிலும் வகுப்புக்குச் செல்லாமல் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். ஆசிரியர்கள் வகுப்பிற்குப் போனால் அங்கு மாணவர் எவரும் இருக்கமாட்டார்கள். ஆனால், தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களால் நிரம்பிவழியும். இதற்கு என்ன கூறப்போகின்றீர்கள்? அலட்சியப் போக்கு ஆசிரியர்களிடமா? மாணவர்களிடமா?

ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தில் முழுமையான அறிவும், திறமையும், அனுபவமும் இல்லை என்றால் மாணவர்களைப் பாடத்தில் கவரச் செய்வது கடினமாகும். ஆசிரியருக்கு மதிப்புக் கொடுப்பது, பணிந்து நடப்பது, பாட நேரத்தில் அவரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதற்கும் ஆசிரியரின் கற்பித்தல் திறமையே காரணமாகும். அதுவன்றி வகுப்புக்குள் நுழையும்போதே பத்திரிகையைப் பார்த்தவண்ணம் செனறால் கற்பித்தல் எப்படி நடக்கும். 'கட்டுரை எழுதாதவர்கள் எழுதுங்கோ, இந்தப் பேப்பரிலை ஆசிரியர்களின் சம்பள உயர்வைப் பற்றிப் போட்டுக்கிடக்கு அதை வாசித்துப்போட்டு வாறன்' என்று சொல்லிப் பாடம் முடியும்வரை பத்திரிகையை வாசித்துவிட்டு வெளியேறும் ஆசிரியர்களும் உண்டு. இப்படியான ஆசிரியர்களின் அலடசியப்போக்கினால் தான் மாணவர்களின் கல்வி வீழ் சியடைகிறது.

கற்பித்தல் குறைபாடுகளால் மாணவர்கள் வேறு ஆசிரியர்களிடம் குறிப்படும் சம்பவங்களுமுண்டு. இப்படியான ஓர் சம்பவத்தில் ஓர் ஆசிரியர் ' உவங்களுக்கு என்னத்தைப் படிப்பிக்கிறது. 10ஆம் வகுப்புக்கு வந்து விட்டார்கள். ஐந் தாம் வகுப்புக் கணக்குக் கூடத தெரியாது' என்றார். ஆனால, இந்த ஆசிரியரே ஆறாம் வகுப்புத் தொடக்கம் அந்த மாணவர்களுக்குக் கற்பித்துகொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதிலிருந்து என்ன தெரிகிறது. குடாநாட்டு அப்பாவிப் பெற்றோரின் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர்களே பொறுப்பென்பது புலனாகின்றது. □

## குற்றச் செயலை கட்டுப்படுத்த ஆலோசனைச் சபை நியமனம்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 13 பேர் கொண்ட தேசிய ஆலோசனைச் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைச் சபையானது குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான கொள்கைகளைத் தயாரிப்பதிலும், நடவடிக்கை எடுக்கின்ற போதும் அரசுக்கும், பொலிஸாருக்கும் ஆலோசனை வழங்குவதே இச்சபையின் முக்கிய மையமாக இருக்கும்.

தற்போது நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றிலேயே இந்த ஆலோசனைச் சபை அமைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மதத் தலைவர்கள், அரச பிரதிநிதிகள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பாதுகாப்பு உள்துறை அமைச்சு ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூடடத்தில் கலந்துகொண்ட பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை விளக்கியுள்ளார்.

கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்துத் தெரிவிக்கையில், இளைஞர்கள் மத்தியில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினை, விரக்திமனப்பான்மை ஆகியவையே குற்றச் செயல்கள் அதிகரிப்பிற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

13 பேர் கொண்ட் இந்தத் தேசிய ஆலோசனைச் சபைக்கு பேராசிரியர் தெல்லாமவெல விமலரத்தின தேரர் தலைமை தாங்குவார் என்று ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ-60,10)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(கந்தர்மடம்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று முன்தினம் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையின்கீழ் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன. (ச-85)

## சங்காபிஷேகம்

(மயிலங்காடு)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மஹாகும்பாபிஷேகதின சங்காபிஷேக விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (தி-118)

## காசோலை வழங்கல்

(மயிலங்காடு)

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு இலவச ஆயுட் காப்புறுதி திட்டத்தின் கீழ் காசோலைகள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலாளர் எஸ்.திருவாகரன கலந்துகொண்டு பயன் பெறுநர்களுக்கு காசோலைகளை வழங்கவுள்ளார். (தி-118)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திருச்சி. நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (தி-83)

மிலேனியம் சிற்றி இராணுவ முகாம்

## உடுகம் பொலவின் கட்டாய லீவு திங்கள் முதல் அமுல்

(கொழும்பு)

மிலேனியம் சிற்றி இராணுவ முகாம் சுற்றிவளைப்பில் குற்றஞ் சாட்டப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம் பொலவிற்கு நேற்று முன்தினம் முதல் கட்டாய லீவு வழங்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவும் உயர் நீதிமன்றமும், குற்றஞ் சாட்டப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம் பொலவிற்கு கட்டாய லீவு வழங்கும் முடிவை அங்கீகரித்துள்ளன.

மிலேனியம் சிற்றியில் அரச இராணுவ முகாம் இருப்பதை அறிந்திருந்த போதும், குலசிறி உடுகம் பொல அதனைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளமை தவறான செயல் என ஜனாதிபதி ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் சட்டத்தின் கீழ் செயற்பட்ட பாதுகாப்பு உளவுப் பிரிவு ஒன்று இந்தச் சுற்றிவளைப்பில் பாரிய இழப்புக்களை சந்தித் திருககின்றது.

உண்மையில் மிலேனியம் சிற்றியில் செயற்படுவது யார்? என்பதை குலசிறி உடுகம் பொல அறிந்திருக்காத பட்சத்தில் அது குறித்து பொலிஸ்மா அதிபரிடம் இருந்தோ அல்லது இராணுவத் தளபதியிடம் இருந்தோ தகவல்களைப் பெற்றிருக்கவேண்டும்.

ஆனால் அவர் தன்னிச்சையாக இவ்விடயத்தில் செயற்பட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி ஆணைக்குழு குற்றஞ் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-60,10)

## ஐரோப்பிய ஆணைக்குழு 60 மில்லியன் டொலர்

(கொழும்பு)

கடந்தகாலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கி வரும் ஐரோப்பிய ஆணைக்குழு கடந்த ஆண்டில் அதற்கென 60 மில்லியன் டொலர் நிதியைச் செலவழித்துள்ளது.

வுவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சேதமடைந்துள்ள வடக்கு - கிழக்கை மீளப் புனரமைப்புச் செய்யவுமே இந்நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் தமது சொந்தத் தொழிலை இழந்துள்ள சுமார் 3ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான விவசாய உள்ளீடுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் உளளிட்ட மற்றும் பல தொழில் உபகரணங்களையும் மேற்படி ஐரோப்பிய ஆணைக் குழு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-18)

# வாகன விபத்துக்களின் காரணங்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும்

வாகன விபத்துக்கள் பற்றிய விஞ்ஞான விளக்கம்; வாகன அசைவு பற்றிய விஞ்ஞான விளக்கம் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் மிக அவசியமானது. இங்கு விஞ்ஞான ரீதியான அணுகு முறையைத் தவிர்த்து சாதாரண ஒரு பொது மகன் விளங்கக்கூடிய வகையில் வாகனங்கள் அசைவு பற்றித் தரப்படுகிறது.

## வாகனங்களின் அசைவு

அசைவு ; வாகனங்களின் அசைவு பற்றிய ஒரு கருத்தாக்கம் "உந்தம்" என்ற சொல்லின் பொதுவான எண்ணம்.

ஒரு பருமனான பெண்ணும், பருமன் குறைந்த. அதே உயரமுடைய மெலலிய பெண்ணும் ஒரே வேகத்தில் நடந்து வருகிறார்கள். அவர்களுடைய அசைவின் தொகை ஒன்றலல. பருமனான பெண் கூடிய அசைவுத் தொகையோடு வருகிறாள். மெல்லிய பெண் குறைந்த அசைவுத் தொகையோடு வருகிறாள். வேகம் ஒன்றாய் இருக்க அவர்களின் அசைவுத் தொகையில் வித்தியாசம் உண்டு. அது அவர்களின் உடல் பிண்டத்தின் (**Mass**) தொகையில் தங்கியுள்ளது. வேகம் ஒன்றாய் இருக்க பிண்டத்தின் தொகையில் அசைவின் தொகை தங்கியிருக்கிறது. இவ் அசைவின் தொகையை "உந்தம்" என்று விஞ்ஞானச் சொல்லினால் வழங்குவர். இரு பெண்களின் உடற் பிண்டம் ஒன்றாய் இருக்க "வேகம்" வித்தியாசப்படின் வேகத்தின்படி உந்தம் வித்தியாசப்படும். இந்த இரண்டு காரணிகளையும் தொடர்புபடுத்தினால்,

| பிண்டம் x வேகம் = உந்தம் |
|---|

வாகனங்கள் வேகத்தோடு அசையும்போது பெரிய லொறியும் மோட்டார் காரும் ஒரே வேகதகில் அசையுமானால் லொறியின் அசைவுத்தொகை அதிகமாகும். ஒரே பிண்டமுள்ள இரண்டு கார்களில் ஒரு கார் நூறு கிலோ மீற்றரிலும், மற்றயது இருபது கிலோ மீற்றரிலும் போகுமானால், முன்னையது பின்னையதிலும் ஐந்து பங்கு அசைவுத் தொகையுடையது.

உந்தத்தோடு அசையும் ஒரு வாகனம் ஒரு சுவரில் மோதி நிற்குமானால் உந்தம் அழிகிறது. ஆனால் அதன் உந்தம் சுவரை இடிப்பதனரல் அழிகிறது. ஒரு லொறியும் அதனிலும் பாரம் குறைந்த காரும் எதிரெதிராக மோதினால் காரும், லொறியும சேதமடைகின்றன. கார் ஒருவேளை அதிக பலம் இல்லாத இரும்பினால் ஆக்கப்பட்டால் காருக்கு அதிக சேதம் விளைகிறது. உந்த அழிவு இரண்டுக்குமே சேதத்தை விளைவிக்கும். ஒரே திசையில் இரண்டும் போகும்போது லொறிக்குப் பலமான இரும்பினால் செய்யப்பட்டிருப்பதனால், ஒருவேளை சேதங்குறையலாம்.

இந்த உந்தம் பற்றிய விளக்கம் பொது மகனுக்குரியதாக இங்கு தரப்பட்டுள்ளது.

## எதிர்வினைக்காலம்

ஒரு பொருளை நாம் கண்டு அப் பொருள் விழித்திரைக்குப போய், மூளையின் பார்வை மையம் போய், இது இன்னபொருள் என்று அறிவதறகு ஒரு சாதாரண மூளைக்கு இருபதில் ஒரு செக்கன் (20/1) பிடிககும் .பின்னர் மூளைக்கோ, காலுக்கோ ஒரு கட்டளையிட்டு அவை தொழிற்பட அதிலும் கூடிய காலம் எடுக்கும். அது ஒவ்வொருவருடைய மூளை அமைப்பைப் பொறுத்தது. குடித்திருப்பவனும், புகைபபிடிப்பவனும் வாகனங்களை ஓட்டக்கூடாது என்று சொல்லுவது இதனாலதான். அவனுக்கு மூளைக்குச் செல்லவும், அதன்பின் கைகால் அசைவு பெறவும் நீண்ட நேரம் எடுக்கும். "பிறேக்" கையுடனே அமத்த மாட்டான். இதனை உளவியலில் "எதிர்வினைக்காலம்" என்று சொல்லுவர்.

## சமநிலை

வாகனங்களில் இரு சில்லு, முற்சில்லு, நாற்சில்லு என்ற சமநிலைபற்றிப் பிரிக்கலாம். இரு சில்லு வாகனங்களுக்கு முன் செல்லும் அசைவு இன்றேல் அவை பாடத்தில் விழும. முற்சில்லு வாகனங்களும், அசையாத நேரத்தில் உறுதிநிலை உடையனவாயினும், வேகமாகச் சென்று வளைவில் திரும்பும் போதோ, சமமற்ற வீதிகளின் ஓரங்களில் செல்லும் போதோ சமநிலை அற்றன. நாற்சக்கர வாகனங்களில் லொறி, பஸ்வண்டி, வான் என்பன சமநிலையுடையன. சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் என்பன அவை வேகமற்ற நேரத்தில் எப்போதும் சமநிலை அற்றன.

சமநிலைத தளம்பம் இருசில்லு வாகனங்களுக்கும் அடுத்ததாக முற்சில்லு வாகனங்களுக்கும் ஏற்படுகிறன்றன. வான் நாட்சில்லு வாகனமாயினும், அதில் ஏற்றப்படும் மனிதர், பொருட்கள் உள்ளடக்கபபடும விதத்தில் அதன் சமநிலை அமையும். பஸ், வான் என்பவற்றில் மிகப் பாரமான பொருள்களை மேற் கூரையில் ஏற்றுவதனால் வளைவுகளிலும் ஒப்பற்ற ஓரம பக்கவாட்டில் உள்ள தெருககளிலும செல்லும்போது சமநிலை அற்றனவாய் குடைசாயும. பஸ்ஸில் அதிகம் பேரை ஏற்றுவதனால் சமநிலைத்தளம்பம் பொதுவாக ஏற்படுவதில்லை. ஏனெனில், பஸ்ஸின் மத்திய நெடுங்கோட்டு வரிசையிலேயே மக்கள் ஏற்றப்படுகிறார்கள். பக்கங்களிலும், வாயிற் பகுதிகளிலும் மிதிபலகையிலும் அதிகம். பேரை ஏற்றி அவர்கள் பக்கவாட்டில் தொங்கும்போது சமநிலைத் தளம்பம் ஏற்படும். கூடாரத்திலும் பாரமான பொருட்களை ஏற்றிவிட்டால் பேசவேண்டியதில்லை. குடைசாயும் வாய்ப்பு அதிகம்.


வான்கள் பஸ்ஸிலும் அகலம் குறைநதன. அதனால் ஓரஙகளிலும் வாயிலிலும் நெருக்கமாக மக்களை அடைந்தால், வீதி ஓரங்களில் பெரிய வாகனங்களை விலத்திச் செல்லும்போது அநேகமாக குடைசாயும். அதிலும் வானுடைய கூடாரத்திலும் பாரமான பொருள்கள் ஏற்றப்பட்டிருநதால் நிச்சயம் குடைசாயும். பாரமேற்றிச் செல்லும் வாகனங்களின் சில்லுகள் காற்றில்லாமல் போகும்போது, வீதிஓரச் சரிவுகளில் சமநிலைத் தளம்பம் ஏற்பட்டுக் குடைசாயும்.

## வளைவுகளில் வேகம்

வட்ட இயக்கம் என்பது ஒரு பெரிய பகுதி. அதனைப் பொது மகனுக்கு விளங்கத்தக்கதாகச் சொல்ல முயலுவோம்.

ஒரு கல்லை ஒரு கயிற்றின் நுனியில் கட்டிக் கைவிரல்களின் இடையே இறுகப்பிடித்துச் சுழற்றினால், கல்மேலெழுந்து கையும் கல்லும் உள்ள தளத்தில் வட்டமாகக் கைவிரலைச் சுற்றிவரும். நூல் முறுக்குபவர்கள் இவ்வாறு செய்வதை வாழ்கையில் காண்கின்றோம். இவ்வாறே வாகனங்களும் வளைவில் திரும்பும் போது வட்ட இயக்கத்தின் ஒரு பகுதியில் இயங்குகின்றன.

ஒரு சுவர்க் கடிகாரத்தின் "பெண்டுலம்" (**Pendulum**) வட்ட அசைவின் ஒரு பகுதியில் இயங்குகின்




றன. கிரகங்கள் சூரியனைச்சுற்ற வட்ட அசைவில் இயங்குகின்றன.

**A** என்பது ஒரு லொறி. அது இந்த வளைவில் வேகத்தோடு வருகிறது. அதன் நான்கு சில்லுகளில் பாதையின் உட்பக்கமாக இருக்கும் இரண்டு சில்லுகளிலும் உள்ள வேகமும், வெளிச்சில்லு இரண்டிலும் உள்ள வேகமும் ஒன்றல்ல. உட்சில்லு நிலத்தோடு அதிக உராய்வு பெறுகின்றது. இதனால் வண்டி குடைசாயும் வாய்ப்புண்டு. அது குடைசாயாமல் இருக்க அதன் வேகம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழே இருக்கவேண்டும். வளைவின் ஆரத்திலும், பாதையின் உராய்விலும் இது தங்கியுள்ளது. கிணற்றின் ஓரத்தில் துணிச்சல் விளையாடடுக்காரர்கள் மோட்டார் சைக்கிள் விழாமல் ஓட்டிக் காட்டுகிறார்கள். கிணற்றுச் சுவர்களின் உராய்வு, கிணற்று வட்டத்தின் ஆரம், மோட்டார் .சைக்கிளின் வேகம் என்பவற்றில் அது சுற்றுவது தங்கியுள்ளது. இது பெரிய சாதனை என்று பொதுமக்கள் வியப்படைகிறார்கள.

வீதிகளின் வளைவுகளில் வாகனங்கள் செலுத்தும்போது மிகக் குறைந்த வேகத்தில் செலுத்த வேண்டும். இல்லையேல் வாகனம் குடைசாயும்.

## வாகனத்தில் இருப்பவர்களின் சமநிலை

ஒரு பஸ்ஸில் பின் கதவால் ஒருவர் ஏறுகிறார். உள்ளே போய் நிற்கிறார். மேலே கம்பியில் பிடிக்க வில்லை. திடீரென சாரதி முன் நோக்கி வேகத்தோடு செலுத்துகிறார். அப்பொழுது பிரயாணியின் தலை பின்னோக்கிச் சாய்ந்து விழுகிறார். இதற்கு விளக்கம் என்ன? ஒரு பொருள் இயங்கும் போது அதனோடு ஒட்டியிருக்கும் பொருளும் அதே வேகத்தில் இயங்குகிறது என்பதுதான் அதற்கு விளக்கம்.

பஸ்ஸை திடீரென்று எடுக்க பஸ்சோடு கால் ஒட்டியிருப்பதால் கால் பஸ்வேகத்தில் செல்ல தலை அதேவேகத்தைப் பெறாததால் தலைநிற்க கால் முன்போக பிரயாணிக்குச் சமநிலைத் தளம்பல் ஏற்படுகிறது. ஆசனத்தில் இருப்பவர்களின் தலையும் உடலும் பஸ்ஸின் வேகத்தோடு ஒத்துச்செல்வதால் சமநிலைத் தளம்பம் ஏற்படுவதில்லை. வேகமாக ஓடும் வாகனங்களில் இருந்து திடீரெனக் குதித்தால், கால் பூமியோடு சேர்ந்து பிறேக் போட, தலைவாகன வேகத்தில் செல்ல முன்னோக்கி தலை அடிபட்டு, உடலும், தரையோடு உரசுப்படுகிறது. சில வேளைகளில் அதிகமான பிரயாணிகளை எற்றிக் கொண்டு வரும்பொழுது பின்பக்கக் கதவால் ஒரு பிரயாணி இறங்குகிறார். நெருக்கடியால் அவர் முன்னுக்கு வந்து இறங்க முடிவதில்லை. அவர் இறங்குவது சாரதிக்குத் தெரியாது. சாரதியின் பக்கக் கண்ணாடியிலும் தெரியவிடாமல் முன் வாசலிலும் பிரயாணிகள் நடத்துநரோடு நிற்கிறார்கள். அவர் இறங்குவதை நடத்துநரும் கூறுவதில்லை. பிரயாணி பஸ் அசைய பக்கத்தில் விழுகிறார். சில வேளைகளில் பின் சில்லும் அவா அங்கங்களின் மேல் ஏறுவதுமுண்டு.

கார்களின் சாரதிகளே அதிக வேகத்தோடு சென்று திடீர் பிறேக் போட முன்நோக்கி வீசபபடுகிறார்கள். எனவே அசையும் பொருளோடு முட்டியிருப்பன. அப்பொருளின் வேகத்தைப் பெறுகின்றன. பஸ்ஸின் பக்கப் பலகைகளில் சில முடிச்சுக்கள் இருக்கின்றன. திடீர் என்று பஸ்ஸை நிற்பாட்டினால பொருட்கள் முன்னோக்கி அசைந்து இருப்பவர்களின் தலையில் விழும். இந்த அசைவின் கோட்பாட்டை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

வாகன விபத்துக்களுக்குக் காரணங்களை சுருக்கிக் கூறினால், அவை பின்வருவனவாக. அமையும்;

1) வாகனங்களின் கட்டுப்படுத்த முடியாத உந்தம்
2) சமநிலைத் தளம்பல்
3) வளைவுகளில் வேகம்
4) வாகனத்தில் இருப்போரின் சமநிலை

## தவிர்க்கும் முறைகள்

1) வாகனங்களை அதிக வேகத்தில் செலுத்தாது தவிர்த்தல்
2) வாகனங்களில் அதிகமான பாரங்களை ஏற்றி உந்தத்தைக் கூட்டாமல் இருத்தல்
3) எப்போதும் "பிறேக்" (**Brake**) தகுநத வினைத் திறனோடு செயற்படவேண்டும். வாகனங்களை வெளியில் எடுக்க முன் "பிறேக்" சில்லுகளின் காற்றமுத்தம் என்பவற்றை சரிபார்த்த பின்பே வெளியில் எடுத்தல் வேண்டும்.
4) சாரதி மதுபோதையிலோ சிகரெட் முதலியவற்றைப் புகைத்துக்கொண்டோ வாகனமோட்ட அனுமதிக்கப்படாது.
5) சாரதிகளுக்கு சான்றுதல்கள் இருக்கவேண்டும். அவை குறிகிய காலங்களுக்கே செல்லுபடியாகக் கூடியதாக இருகக வேண்டும். பின் புதுப்பிக்க வேண்டும்.
6) சாரதிகள் வீதி ஒழுங்குகள், சின்னங்கள், வளைவுகள், குருட்டு மூளைகள் என்பவற்றை அவதானித்தே வாகனம் செலுத்த வேண்டும்.
7) மோட்டார் சைக்கிள்கள் அதிக வேகத்தோடு காரணமின்றிச் செலுத்துவதை நிறுத்த வேண்டும். வீதி ஓரங்களில் வேகத்தை அளக்கும் கருவிகளைப் பொருத்த வேண்டும். வாகனத்தின் இலக்கம் வேகம் என்பன அக்கருவிகள் பதியக்கூடியதாக அமையவேண்டும்.
8) மோட்டார்சைக்கிள் செலுத்துவோர் தலைக் கவசம் அணிய வேண்டும். வாகனங்களின் தொகையை எடுததால் மோட்டார் சைக்கிள்களே முதல இடத்தைப் பெறுகின்றன போலத் தெரிகிறது. இதனால் பின்னே இருப்பவர்களுக்கு தலைக்கவசம் அணிய வேண்டும். ஏனெனில் தூக்கி எறியப்படுபவர்கள் இவர்களே. குழந்தைகளை மடியில்வைத்துக்கொண்டோ, அணைத்

பண்டிதர்
க.சச்சிதானந்தன்

துக்கொண்டோ திறந்தவாகங்களில் பிரயாணம் செய்யக்கூடாது
9) எந்தவிதமான வாழ்க்கை உபயோகமும் இன்றி பலர் சவாரி இன்பம், விளையாட்டு என்பவற்றிற்காக மோட்டார் சைக்கிள்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பின்றி அதிக வேகத்தில சென்று உற்சாகம் பெறுகிறார்கள். இதனைத் தவிர்த்தல் கஷ்டம்.
10) பிரயாணிகள் ஓடும் வாகனங்களில் இருந்து குதித்து இறங்கக் கூடாது. வாகனங்களின் பிடி கம்பிகளில் வாகனம் செல்ல முன் இறுகப் பற்றிச் சமநிலையைப் பேண வேண்டும்.
11) மழை நாள், ஈரலிப்பானதெரு, பனி மூட்டம் இருக்கும் நாள் என்பவற்றில் எப்போதும் வாகனத்தை மிக மந்த கதியிலேயே செலுத்த வேண்டும்.
12) வாகனஙகள் ஒன்றையொன்றை விலத்தும் போது முன்னுள்ள வாகன காரரின் சம்மத சமிக்ஞை பெறாமல் விலத்தக் கூடாது.
13) வெள்ளம், மழை என்பவற்றால வீதி ஓரங்கள் நனைந்து இருக்கும்போது பக்கங்களுக்கு வாகனதைதைச் செலுத்தாதிருத்தல் வேண்டும்.
14) பாலஙகள், ஒடுக்கமான தெருக்களில் வாகனங்கள் ஒன்றின்பின் ஒன்று செல்லுதல் வேண்டும். எதிர்த்திசையில் வரும் வாகனங்கள் பக்கத்தில் தகுந்த அகலமும், நனையாத நிலமும் இருந்தால்தான் விலக வேண்டம்.
15) குருட்டு மூலைகளில் (**Blind Corners**) வீதிக்குப் பொறுப்பான பகுதியார் கண்ணாடிகள் எதிரே அமைக்கவேண்டும்.
16) எல்லாவற்றிறகும் மேலாக மனித உயிர்களை விலையுயர்ந்த மேலான பொருள் என்று எண்ண வேண்டும். இன்றைய சூழ்நிலையில் மனித உயிர்கள் மிகவும் மலிவான பொருளாக எண்ணப்படுகிறது. இநத மனப்பாங்கு மாறினால்தான் வீதி விபத்துக்கள் குறையும்.

# தொழிலாளர் உரிமைகள் நிச்சயிக்கப்பட வேண்டும்

எஸ்.அமரசிங்க

(கொழும்பு)

நட்டஈட்டுத் திட்டத்தை வாபஸ் பெற்று தொழிலாளர்களின் உரிமைகள் நிச்சயிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி உறுதி கூறுமானால் தங்களின் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட முடியும் என அனைத்து நிறுவனங்களின் தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுபற்றி சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.அமரசிங்க கருதது வெளியிடுகையில,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் நடைமுறையில் இருப்பதால் ஆட்சிக்கு வரும் எந்தத் தரப்பினரும் எங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

ஏற்கனவே நடாததப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் எந்தவித பயனும் இல்லை என்பதை உணர்ந்துள்ளோம்.

இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் நாம் பேச்சுக்களை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

.எமது இத்தகைய நிலைப்பாடு பற்றி ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பி.மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அறிவித்துள்ளோம் என்றார் அவர். (யே-60,10)

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயத்தினால் ஆங்கில மொழி வலுப்படுத்தல் செயலமர்வு ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டது. இச் செயலமர்வில கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் யு.எஸ்.எயிட் இன் திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அசான் அமலசேகர கலந்து சானறிதழ்களை வழங்கவுள்ளார். மேற்படி செயலமாவில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் கடந்த டிசம்பர் மாதம் 24ஆம் திகதி அன்று யாழ்.கல்வி வலயத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (யே-3,19)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

43

## தேசவழமை அதிகாரம் 2

## மஞ்சணீர்வகை

### மஞ்சணர்ச் சடங்கு

**பிள்ளைகளை எடுத்து வளர்க்கும் பிதாமாதாவின் இனத்தாருக்குள் சிலர் சம்மதித்தும் சிலர் சம்மதியாமலுமிருந்தால் வளர்க்கப்படும் பிள்ளைகளுக்கு ஆதனம் பிரிவிட்டுக்கொடுக்கும் விதம்.**

5. ஒரு புருஷனும் பெண்சாதியும் இருபேருமாக மறுபேருடைய பிள்ளையொன்றை மஞ்சணீர் குடிக்கவேணுமென்றால் அதற்கு இவர்கள் இரண்டுபேருடைய அண்ணன் தம்பி அக்கை தங்கைமார் அல்லது முடுகின உறவுமுறையார்களிலே சிலர் சம்மதிதநுச் சிலர் சம்மதியாமலிருந்தால் அந்தச் சம்மதியாத பேர்களுடைய உரிமைப பங்கு நீங்கலாகச் சம்மதித்தபேர்களுடைய உரிமைப் பங்குள்ளாக அவர்கள் அவர்கள் சம்மதித்தார்களென்கின்ற நம்பிக்கைக்கு அந்த மஞ்சணீரிலே அவர்களைக் கொண்டு தொடுவித்துப் புருஷனும் பெண்சாதியும் மஞ்சணீர் குடித்து அந்தப் பிள்ளையை உரிமையாக்கிக்கொள்ளலாம். அந்தப் புருஷன் பெண்சாதியென்கிலும் அவர்களில் ஒருவரென்கிலும் செத்த பின்பு, அந்தச் சம்மதியாத பேர்கள் அந்த மஞ்சணீரப் பிள்ளையுடனே அவரவருக்குண்டான பங்குவீதம் பிரிவிட்டுக் கொள்ளுவார்கள். ஆனால் இந்த உரிமைக்காரர் யாதொரு அசட்டையினாலென்கிலும் மறு விதங்களாகவென்கிலும் அந்த ஆதனத்தைச் சில வருஷங்களாகப் பிசகில்லாமல் ஆட்சிப் பெறும்படி அந்த மஞ்சணீர்ப்பிள்ளை புறமாக விட்டிருந்ததேயுண்டானால், அவர்கள் அந்த ஆதனத்தின் பேரில் கொண்ட உரித்தை இழந்து விடுவார்கள்.

**மூன்று பேர் சகோதரரில் ஒருவன் ஒரு பிள்ளை எடுத்து வளர்த்தால் நடக்கும் வழமை**

6. மூன்று பேர் சகோதரமான அண்ணன் தம்பிமார் இவர்களில் ஒருவனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள். மற்ற இரண்டுபேரும் பிள்ளையில்லாத மலடராயிருந்தார்கள். இந்தப் பிள்ளையில்லாத மலடரிலொருவன் தன்னுடைய சகோதரமானவனுடைய பிள்ளைகளில் ஒன்றின் பேரிலே கொண்ட அன்பினாலே மஞ்சணீர் குடிக்க வேணுமென்றவிடத்தில், மற்ற மலடனாயிருக்கிறவன் அதற்கு சம்மதியாமற் தடை பண்ணினாலும் இந்த இரண்டு அண்ணன் தம்பிமாரும் அந்தந்த தவுதல் பண்ணின மலடனுடைய உரிமைப் பங்கு நீங்கலாக விட்டு வைத்துத் தாங்கள் நினைத்த நினைவின் படிக்கு அந்த மஞ்சணீரைக் குடிப்பார்கள். சில நாளையிற் பிறகு அந்த மஞ்சணீர்ப் பிதா காலஞ்சென்று போனதேயுண்டானால், அவனுடைய ஆதனத்தை அந்த மஞ்சணீர்பிள்ளையும், தடை பண்ணின மலடனும் நேர் சரியாகப் பிரிவிட்டுக்கொள்வார்கள். அதன் பிறகு இந்த மலடன் தன்னுடைய சகோதரனுடைய மஞ்சணீ குடிக்கப்படாத மற்றப் பிள்ளைக்குத் தன்னுடைய ஆதனத்தில் எவ்வளவும் கொடுக்கவேணுமென்று விரும்பினானாகில், அப்போது அந்த மஞ்சணீர்ப்பிள்ளை தன்னுடைய மஞ்சணீர்ப் பிதா காலஞ்சென்று போனபடியால் நீதிப்படிக்குத் தவிர்க்கலாமோவென்று கேட்குமிடத்தில் தவிர்க்கப்படாதென்று காணப்பட்டிருக்குது. அதேனென்றால் அவன் தன்னுடைய பிதாவழிக்குத் தன்னுடைய சிறிய பிதாவுக்குத் தான் உரிமைக்காரனென்கிற முறைமை மஞ்சணீருடனே அற்றுப் போனபடியால் தவிர்க்கப்படாது. ஆனால் அந்த ஆதனம் கொடுக்கப்பட்ட சிறிய பிதாவென்கிலும் பெரிய பிதாவென்கிலும் உயிருடனே இருக்கும் காலமளவாகத் தன் மனதின் படியே நடப்பிக்கிறதற்கு இந்த மஞ்சணீர்ப்பிள்ளை மனது பொருந்தியிருக்க வேண்டியது. பிற்காலம் இந்தப்பிள்ளை சகலத்திற்கும் உரிமையாகிறது.

**தனக்கு மேற்பட்ட அல்ல கீழ்ப்பட்ட சாதியிற் பிள்ளையை எடுத்து வளர்த்தால் நடக்கும் வழமை**

7. முன் சொன்னபடிக்கு ஒருவன் தனக்கு மேற்பட்ட அல்லது கீழ்ப்பட்ட சாதியிற் பிள்ளையை எடுத்து வளர்த்து மஞ்சணீர் குடித்தானாகில் அந்தப் பிள்ளை அவனுடைய ஆதனத்திற்கு உரிமையாகிறது மாத்திரமல்ல, அவன் சாதிக்கு மேற்பட்டதென்கிலும் கீழ்ப்பட்டதென்கிலும் மஞ்சணீர் குடித்தவுடனே மஞ்சணீ குடித்த பிதாவினுடைய சாதியிலும் உட்படுகின்றது. ஆனால ஒரு பெண்ணாய்ப் பிறந்தவள் ஒரு பிள்ளையை எடுத்து மஞ்சணீ குடித்தாளேயானால்,அவள் பெண்பிறந்தவளான படியால் அந்தப்பிள்ளை அவளுடைய சாதிக்குட்படுகிறதில்லை. தனது சொந்தப் பிதாவின் சாதியிலேயே நின்று விடுகிறது.

ஒரு மனுஷன் முன்சொல்லிய பிரகாரம் மறுசாதியிலே ஒரு பெண்பிள்ளையை எடுத்து மஞ்சணீர் குடித்தானாகில் அந்தப்பிள்ளை மாத்திரம் மஞ்சணீர்ப் பிதாவினுடைய சாதியிலுட்படுகிறதல்லாமல், அவள் வயிற்றுவார் அந்தச் சாதியில் உட்படுகிறதில்லை. அதேனென்றால், அவள கலியாணம் பண்ணின பிறகு அவளுக்குப் பிள்ளையுண்டானால் அதுகள் அந்தப பிதா வழியாகப் போகிறதுகள். இந்தவிதமான மஞ்சணீர் அடிமைகளுக்குள்ளானால் அது மறுவிதமாயிருக்கும். அதேனென்றால் அடிமையினுடைய பிள்ளைகள் அந்த வயிற்றுவார் வழியே சாதி காண்கிறது.

## அதிகாரம்3

### காணிகள் தோட்டங்கள் முதலானவைகளின் ஆட்சி

**பொதுஆட்சி**

1. இரண்டுபேரென்கிலும் மூன்று பேரென்கிலும் ஒரு காணியைப் பங்கு பிரியாமற் பொதுவிலே ஆண்டு வந்தார்களேயானால் அவர்களிலொருவன் அந்தக்காணியிலே தன்னுடைய பங்குப் பிரிவுக்குச் சற்றுக்குறைய ஒரு புறமாக அடைத்துச் செய்கைப்பண்ணிக் கிணறும் வெட்டித் தென்னம்பிள்ளைகளும் மறு கனிமரங்களும் உண்டாக்கினதேயுண்டானால், மற்றப் பங்காளர் தங்கள் செய்கை செலவு பண்ணாமல் அந்தப் பங்காளன் செய்த செய்கையின் பேரால் ஒரு நல்ல இன்பமான புரோசனங்காணுமளவாகப் பார்த்திருந்து அபேட்சைத்தனமாகவென்கிலும் அந்தப் பங்களானைத் துன்பப்படுத்தி அலைக்கழிவு பண்ணவென்கிலும் புரட்டுப்பண்ணுவார்கள். அப்படி அநேகம் இவ்விடத்திலே தமிழருக்குள்ளாகக் கண்டிருக்கிறோம். அல்லாமலும் அறிவின்மையினாலே தங்கள் தேசத்தின் ஒழுங்குகளையும் வழமைகளையும் கூர்ந்து விசாரியாதபடிக்கு அந்தப் புரோசனத்தில் தங்களுக்குப் பங்கு கிடைக்கவேண்டும் என்று வழக்குச் சொல்லுவார்கள். இந்த விதமான தெண்டிப்பினாலும் முயற்சியினாலும் வரப்பட்ட புரோசனம் தெண்டித்தவனுக்கே கிடைக்கவேண்டும் என்று தீர்மானம் பண்ணப்பட்டிருக்கிறது. ஆனால் தாங்கள் நினைத்தபடிக்கு அந்தப் புரோசனத்தில் ஒன்றுங்கிடைத்தில்லை என்கிற வன்மத்தின் பேரால் தங்கள் தலையுரப்புக் காண்பிக்கிறதற்கு அந்தக்காணியிலே அவரவருக்குண்டான பங்கு இன்னதென்று காணும்படிக்கு உண்டான பங்கு வீதம் பிரிவிட்டுத்தரவேண்டும் என்று கேட்பார்கள். இது காரியம் கூடாதென்று சொல்லக்கூடாது. ஆனால் இதிலே ஒரு காரியம் பேணிக்கொள்ள வேண்டியது. அதெப்படியென்றால் அந்தச் செய்கை பண்ணினவனுடைய செய்கை அவன் பங்குக்குள்ளே சேரும்படிக்கு மற்றப் பங்காளருக்குச் செய்கை பண்ணாத நிலங்களிலே பிரிவு காணும்படிக்கும் வகை தேட வேண்டியுள்ளது. அந்தப்படி இந்தக்காணியைப் பிரிவு பண்ணமால் விட்டுவைத்து மற்றப் பங்காளரும் ஒவ்வொரு புறம் பிடித்துச் செய்கை பண்ணிச சரிவரப் பயிர்மரங்களும் வைத்துண்டாக்கிப் புரோசனப்பட்டு வருகிற காலத்திலே பங்கு பிடிக்கவேணுமென்று கண்டால், அப்போது காணி முழுதும் பொதுவாகக் கண்டு அவரவர் செய்கை பண்ணின இடத்தைக் குறியாமற் பங்கு பிரிக்கவேண்டியது. (தொடரும்.)

---

## படையினரின் மன உளைச்சலை தடுக்க அதிகாரிகளுக்குப் பயிற்சி

(கொழும்பு)

அண்மைக்காலமாக இராணுவத்தில் உள்ளோர் தற்கொலை செய்வது அதிகரித்து வருகிறது. இதனைத் தடுக்கும் வகையில் இராணுவம் மற்றும் கடற்படை, வான்படையினருக்கு விசேஷட பயிற்சிகள் அளிக்கப்படும் என்று இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல்பலகல்ல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவத்தில் உள்ள படையினர் சொந்தக் காரணங்கள் உள்ளிட்ட மன உளைச்சல்களால் தற்கொலை செய்து வருகின்றனர்.

இராணுவத்தினருக்கு தமிழ்மொழி பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்மொழி அறியாததால் தமிழ் மக்களை அணுகுவதில் அவர்களுக்கு சிக்கல்கள் ஏற்படுகின்றன. தமிழர்களின் அன்பைப பெற இந்த நடவடிக்கை உதவும். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினருக்கு தமிழ் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. சொந்தக் காரணங்கள் உள்ளிட்ட மன உளைசல்களால் படையினர் தற்கொலை செய்வதைத் தடுக்கும் வகையில் உரிய ஆலோசனைகள் அளிக்கவும் அதிகாரிகளுக்குப பயிற்சி அளிக்கபபடுகின்றது என்றார். (தி)

## புதிய கூட்டணியின் பிரசாரம் ஒரே மகுடத்தின் கீழ்

(லண்டன்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் ஒரே மகுடத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சியின் சிங்களச் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரத்தின் பிரதான நோக்கம் என்ன? என்பது விரைவில் அறிவிக்கப்படும்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால், வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைக்குத் தர்வு காணும் வகையில் உடனடியாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். இதில் தமிழ் மக்கள் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

அதேநேரம் தமிழீழ விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்து சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவேண்டும் என்றார். (தி-60,10)

## இணைநது போட்டியிடுவதென தமிழ்க் கூட்டமைப்பு முடிவு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழு நேற்று முன்தினம் கொழும்பில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமையகத்தில் கூடியது.

கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடசிப் பிரமுகர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு, எதிர் வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் குறித்து ஆராய்ந்தனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஸ்அணி)ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதென இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மலையக மக்கள் முன்னணி உட்பட தென்னிலங்கைத் தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது பற்றியும் ஆராயபபட்டது.

எனினும், இது குறித்து எதிர்வரும் 15ஆம்திகதி மீண்டும் கூடி முடிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

## அனைத்து மாவட்டங்களிலும் சிஹல உறுமய போட்டி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட சிஹல உறுமயக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கமைய அனைத்து மாவட்டங்களிலும் வேட்பாளர்களை தெரிவு செய்து நியமிப்பதற்கான நடவடிக்கைகளில் கட்சி தற்போது ஈடுபட்டு வருவதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சிஹல உறுமயக் கட்சிக்கு கூடுதலான ஆதரவு கிடைக்கும் என கட்சி எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

## ஐக்கிய நாடுகள் சபையின் மாதிரிக்கூட்டம் இலங்கையில்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவும்,சர்வதேச அபிவிருத்திக்கான கனேடிய சங்கமும் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் மாதிரிக்கூட்டம் ஒன்றை இலங்கையில் முதற்தடவையாக நடத்தவுள்ளன.

நாளை முதல் தொடாந்து 3 நாடகள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில், நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சுமார் 200றகும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம மாநாட்டில் "உலகம் வெப்பமடைதல்" போன்ற கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளது. வெளிநாட்டுக் கொள்கைகளைப் புரிந்துகொண்டு இராஜதந்திர முயற்சிகளின் அனுகூலங்களையும், மதிப்பீடுகளையும் அனுபவத்தினூடாக கற்றுக்கொள்ளும் வாய்ப்பை இலங்கை மாணவர்களுக்கு வழங்கும் நோக்கிலேயே இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (தி-61,8)

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.
-குறள்

வலம்புரி

## ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்க யாருளரோ !

இலங்கைக்குச் சாபக்கேடாக அமைந்து விட்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்காது விட்டால் தற்போது அந்தப் பதவியில் இருந்து கொண்டு அதிகாரம் செய்யும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கைங்கரியங்கள் தொடரவே செய்யும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கீழ் இருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறிமுதல் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாராளுமன்றத்தைக் கலைத்து திடீர் பொதுத்தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தார்.

இதற்கு மேலாக அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்தார். இப்படியே ஜனாதிபதியின் அதிகாரம் நீள்கிறது. இவ்வாறு தனியொருவருக்கு வழங்கப்பட்ட சர்வ வல்லமை கொண்ட அதிகாரம் நாட்டைக் குட்டிச்சுவராக்கிவருகிறது.

எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கு யாரும் முன்வந்திலர். நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்க ஆதரவு தருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அதனைப் பிரதமர் ரணில் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஜனாதிபதியின் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக் கொள்ளாமைக்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி தனக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதால், அதனை இல்லாதொழிப்பதன் மூலம் பாதிப்படையப் போவது தானே என அவர் எண்ணிக் கொண்டார். இதனால் ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

இதேவேளை இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த முழுமையான திருப்தியோடு அந்த அதிகாரம் உள்ள பதவியை இல்லாது ஒழித்து விட்டால், தான் இருந்த ஆசனத்தில் ரணில் விக்கிரமசிங்கா இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை இல்லாதொழித்த திருப்தியை அடைந்து கொள்வதற்காகவே, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க ஆதரவு தருமாறு சந்திரிகா குமாரதுங்கா பிரதமரிடம் கேட்டிருந்தார்.

இவ்வாறு இரண்டு தலைவர்களும், தங்கள் தங்கள் சுயநலனை மையமாகக் கொண்டு திட்டங்களை வகுத்ததனால் ஜனாதிபதி முறை ஒழிக்கப் படாது போக பாராளுமன்றமே கலைபட்டது.

ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆதரவு வழங்கியிருந்தால், அமைச்சுக்களின் பறிப்பு, பாராளுமன்றக் கலைப்பு என்பன இடம்பெற வாய்ப்பில்லாது போயிருக்குமே எனச் சிந்திப்போரும் இருக்கவே செய்கின்றனர்.

எதுவாயினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சி அதிகாரங்கள் யாவும் 2005 ஆம் ஆண்டோடு முற்றுப் பெற்று விடும். அதுவரை பொறுத்துக் கொள்வோமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எண்ணியிருந்தால் அதுவும் தவறாகும்.

ஏனென்றால் ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டுடன் முடிவுறும் என்பதற்கப்பால், 2006ஆம் ஆண்டும் நீடிப்பதற்கான சட்ட திட்டங்களையும், வியூகங்களையும் ஜனாதிபதி வகுத்துள்ளார்.

இதனால் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் பொறுமைக்கு சோதனை ஏற்பட்டுள்ளது. இதை விட இன்னுமோர் சந்தர்ப்பமும் ஜனாதிபதிக்கு உண்டு. அதாவது ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006ஆம் ஆண்டிலேயே முடிவுறும் எனில், மேலுமொரு தடவை பாராளுமன்றத்தைக் கலைக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்துவிடும்.

அதாவது ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி நடைபெறப்போகும் தேர்தலில் வெற்றியீட்டினாலும், ஜனாதிபதியின் தொந்தரவுகள், வெருட்டல்கள், கலைப்புகள், பறிப்புகள் இருக்கவே செய்யும்.

இவற்றை இல்லாதொழிக்க வேண்டுமாயின், எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளும் ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதென திட சங்கற்பம் பூணவேண்டும்.

# கூட்டமைப்பில் பல தமிழ்க்கட்சிகள் இணையும் - சுரேஸ் பிரேமச்சந்திரன்



(கொழும்பு)

தென்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கடசியும் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளன. இவ்வேளையில் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்படுவதன் மூலமே தமிழ் மக்களின் பலத்தை அதிகரிக்க முடியும். அத்தோடு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவதன் மூலமே தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஸ் அணியின் அமைப்பாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக்கழகம் ஆகிய நான்கு அமைப்புக்களும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நேற்று முன்தினம் முதல் தடவையாகக் கூடி ஆராய்ந்தன. எனினும் அப் பேச்சுவார்த்தைகளில் முழுமையான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. இதேவேளை, தேர்தலில் இணைந்து போட்டியிடுவது குறித்து மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனையும் சந்தித்துப் பேசினோம். அமைச்சர் சந்திரசேகரனுடனான சந்திப்பு பிரயோசனமான முறையில் அமைந்தது. இது போன்ற மலையக மக்கள் முன்னணியுடனான சந்திப்புக்கள் தொடர்ந்தும் நடைபெறும்.

மலையக மக்கள் முன்னணி மட்டுமல்லாது, மேல் மாகாண மக்கள் முன்னணி உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் நாம் பேச விரும்புகிறோம்.

இப்போது 4 தமிழ்க் கட்சிகள் மட்டும் இணைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எதிர்காலத்தில் மேலும் பல கட்சிகள் இணையும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

எல்லா விடயங்களுக்கும் உடனடியாகத் தீர்வுகாண முடியாது. வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை இந் நான்கு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது என்பதில் எதுவித மாற்றமும் இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெளியே உள்ள தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ்க் கூட்டமைப்பாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். இது குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். இதற்கிணங்க எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கூடி ஆராயவுள்ளன. இக்கூட்டத்தின் பின்னர் பல முடிவுகள் எடுக்கப்படும் என்றார். (தி-61, 121)

## மீளக்குடியேற முடியாத நிலையில் கிளி. மாவட்டத்தில் 5,691 குடும்பங்கள்

(கிளிநொச்சி)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக வெவ்வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த 5ஆயிரத்து 691 குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்து வருவதாக அண்மையில் திரட்டிய புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளன.

இதனடிப்படையில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்து 498 குடும்பங்களும், திருகோணமாவட்டத்தைச் சேர்ந்த 75 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 32 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 25 குடும்பங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 18 குடும்பங்களும் ஏனைய பிற மாவட்டங்களைச் சேர்ந்த 93 குடும்பங்களும் கிளிநொச்சியில் வாழ்ந்து வருகின்றன.

அதியுயர் பாதுகாப்பு வலயமென இராணுவத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள வீடுகள் போன்றவற்றில் மீளக்குடியேற முடியாத நிலையிலுள்ள குடும்பங்கள் கிளிநொச்சியில் அதிகளவில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-64,8)

## போட்டி காரணமாக சட்டத்தின் தரம் குறையும் அபாயம்

### பிரதம நீதியரசர் கவலை

(கொழும்பு)

சட்ட வல்லுநர்களிடையே தற்போது ஏற்பட்டுள்ள போட்டி காரணமாக சட்டங்களின் தரம் குறையும் அபாயம் காணப்படுவதாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டக்கல்லூரியில் சட்ட மாணவர்களின் மன்ற அங்குரார்ப்பண வைபவத்தில கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

நீதி சட்டத்துறை தொடர்பாக பூரண கவனம் செலுத்தி, இத் துறைகளின் அபிவிருத்திக்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதிச்சேவை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. மேலும், புலமைச் சொத்துச் சட்டம் தொடர்பாக டிப்ளோமா பாடநெறியொன்றையும், சட்டத் துறை தொடர்பான முதுமானிப் பட்டப் பாடநெறியொன்றையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நீதித்துறையை தரமுயர்த்தி அதன் மூலம் பொது மக்களுக்கு சிறந்த பயனை ஏற்படுத்திக் கொடுக்கவும நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-61,10)

# மாவட்ட ரீதியில் தெரிவு செய்யவுள்ள எம்.பிக்களின் எண்ணிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் 2ந் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவுசெய்யப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில் குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தலா ஒன்றால் உயர்வடையவுள்ளது.

கொழும்பு, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தலா ஒன்றால் குறைக்கப்பட்டுள்ளது. மக்களின் வாக்கு மூலம் தெரிவு செய்யப்படும் 196 உறுப்பினர்களுடன் நியமன அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் 29 பேர் அடங்கலாக 225 பேர் பாராளு மன்றத்திற்கு தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| கொழும்பு மாவட்டம் | 20 |
| கம்பஹா மாவட்டம் | 17 |
| கண்டி மாவட்டம் | 12 |
| குருநாகல் மாவட்டம் | 14 |
| களுத்துறை மாவட்டம் | 10 |
| காலி மாவட்டம் | 10 |
| இரத்தினபுரி மாவட்டம் | 10 |
| மாத்தறை மாவட்டம் | 08 |
| புத்தளம் மாவட்டம் | 08 |
| அநுராதபுரம் மாவட்டம் | 08 |
| பதுளை மாவட்டம் | 08 |
| மாத்தளை மாவட்டம் | 05 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 05 |
| பொலநறுவை மாவட்டம் | 05 |
| மொனராகலை மாவட்டம் | 05 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 09 |
| கேகாலை மாவட்டம் | 09 |
| திகாமடுல்ல மாவட்டம் | 07 |
| நுவரெலியா மாவட்டம் | 07 |
| அம்பாந்தோட்டை மாவட்டம் | 07 |
| திருகோணமலை மாவட்டம் | 04 |
| வன்னி மாவட்டம் | 06 |

(சு)

## தினசரி தியானம்

### சாயி அருளமுதம்

உங்களில் பலருக்கு தேகாரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகளோ அல்லது வேறு ஏதாவது மனக்கவலையோ இருக்கிறது. உங்களை இங்கு கொண்டு வந்து தெய்வ அருளோடு தொடர்பு கொள்ளச் செய்து கடவுள் மீது உங்கள் நம்பிக்கையைப் பலப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட தூண்டில்களே அவை. உண்மையில் பிரச்சினைகள், கவலைகள் ஆகியவை வரவேற்கப்படவேண்டும். ஏனெனில் பணிவு, மரியாதை ஆகிய பாடங்களை அவை உங்களுக்குப் போதிப்பனவாகும்.

நன்றி

நாளாந்த சிந்தனை

### ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

## யாழ். மாவட்டத்தில் போட்டியிட முடிவு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அனுமதி கிடைத்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தொகுதி அமைப்பாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். கட்சிப் பணிமனையில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவரது அனுமதி கிடைத்ததும் தமது கட்சி தேர்தலில் போட்டியிடும் என கட்சியின் இணைச் செயலாளர் சி.தேவகுலநாயகம் தெரிவித்துள்ளார். (தி)

# அமைச்சர் மிலிந்த நேற்று இராஜினாமாச் செய்தார்

(கொழும்பு)

பொருளாதார விஞ்ஞான மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தனது அமைச்சுப் பதவி யில் இருந்து இராஜினாமாச் செய் யும் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ் நிலையில் தனது அமைச்சுப் பதவியின் மூலம் எதனையும் செய்ய முடியாது என்று தான் தீர்மானித்தமையே தனது இராஜி னாமாவுக்குரிய காரணம் என்று அக்கடிதத்தில் அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் இராஜி னாமாவை அடுத்து ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் சிலரும் இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. (ம)

# குற்றச்செயல்களைத் தடுக்க ஆலோசனைச்சபை அமைப்பு

(கொழும்பு)

அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக 13 உறுப்பினர்கள் அடங்கிய தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் நிய மித்துள்ளார். இவ்வாலோசனைச் சபை அரசாங்கத்திற்கும் பொலி ஸாருக்கும் குற்றச் செயல்களைத் தடுப்பது பற்றி ஆலோசனைகளை வழங்கும். ஜனாதிபதி செயலகத் தில் இடம்பெற்ற கலந்துரையாட லின் போதே இக்கவுன்சில் நிய மிக்கப்பட்டது.

இக்கவுன்சிலுக்கு வண.பெல லன்வில விமலரட்ணதேரர் தலைமை தாங்குவார். செயலாளராக உள் துறை அமைச்சு செயலாளர் என்.ஜுனைற் பதவி வகிப்பார். ஏனைய உறுப்பினர்களாக வண.நிக் கலஸ் மார்க்கஸ் பெர்ணான்டோ, பொலிஸ்மா அதிபர் இந்திரா டி.சில வா, எஸ். கே.சர்மி, எம்.சுக்கிரி, கொட்பெறி குணதிலக சப்ரக முவா முதலமைச்சர் மொண்டி கோபொல்லாவ, பெரல் பணிப்பாளா கிங்ஸ்லி டொறட்றிகோ, சர்வோதய தலைவர் ரி.ஆரியரட்ண ஆகி யோர் அடங்குவர்.

இது பற்றி ஜனாதிபதி தெரி விக்கையில், குற்றச் செயல்கள் வருடாவருடம் அதிகரித்த வண் ணம் உள்ளன. இவற்றுக்குப் பின் புலமாக அரசியற் காரணங்களும், சமூக பொருளாதார காரணிக ளுமே உள்ளன.

இவற்றைத்தடுக்க உடனடி நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுக்க வேண்டும் என்றார். இக்க வுன்சில் ஆனது குற்றச் செயல் கள் தொடர்பான தகவல்களைத் திரட்டவும் தடுக்கவும், பொதுமக்கள் குழு ஒன்றையும் ஸ்தாபிக்க உள்ளது. (த-6)

## மனோ கணேசன் சந்திப்பு

மேல்மாகாண மக்கள் முன்னணி யின் தலைவர் மனோகணேசன் தமிழ்க் கூட்டமைப்பினரை நேற்றிரவு சந்தித் துப் பேசியுள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், அகில இலங்கை தமிழ்க் காங்கி ரஸ் சிரேஷ்ட உப தலைவர் குமர குருபரன் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர். (த)

## பிரதான...

கட்சியின் நோக்கம். பாராளு மன்றில் சிங்களக் குரலை ஒலிக்கச் செய்யவும் அவர்களின் உரிமை களை வென்றெடுப்பதற்காகவுமே தமது கட்சியை தேர்தலில் போட் டியிட அனுமதித்துள்ளதாக அவர் கூறினார்.

மேலும் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி கூட்டணி தயாராக இருப்பதாக லக்ஷ்மன் கதிர்காமர் அண்மை யில் தெரிவித்த கருத்து வடக்குக் கிழக்குப் பிரச்சினை தொடர்பில் ஐ.தே முன்னணியும் புதிய கூட்ட ணியும சிறிய வித்தியாசத்தை மட்டுமே கொண்டுள்ளன என்பதையே இது காட்டுகிறது. ஐ.தே.முன்ன ணியோ அல்லது கூட்டணியோ இத் தேர்தலில் போதிய பெரும் பான்மையைப் பெறாது. சிங்கள பிரதான கட்சிகள் பிளவடைந் துள்ளதால் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு போன்ற கட்சிகளே தம்மை எஜமானர்களாக காட்டிக் கொண்டிருக்கின்றன என்றார். (த-6)

## நீதிமன்றத்...

மாவட்ட நீதிமன்றில் வி.ஆனந்த சங்கரி தாக்கல் செய்த மனுவை அடுத்தே இந்த இடைக்காலத் தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் வி.ஆனந்தசங்க ரிக்கு பலதரப்பட்டவர்களூடாக மரண அச்சுறுத்தல் விடுக்கப் பட்டதை யடுத்தே விசேட கவனிப் பின் பின்னர் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட நீதிவான் ஜீ.ஏ.தலகொட தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இத் தடையுத்தரவை அடுத்து கூட்டணித் தலைவர்கள் வழக் கறிஞர்களுடன் கலந்தாலோ சனை செய்து வருவதாகவும் எப்பாடுபட்டாவது இப்பிரச்சி னைக்கு சுமுகமான தீர்வொன் றைக் காண்பதற்கு கூட்டணி வட்டாரங்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தீராத தலையிடியை கொடுத் துள்ளா தாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட் டுள்ளனர். (ம)

## யுத்தநிறுத்தத்தை...

செய்யும்போது எழுகின்ற சிக்கல் தொடர் பாக தனக்கும் பிரதமருக்கும் அடிக்கடி அறிவிக்கலாம் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பை துல்லியமாக அவதானிப்பதற்கு உயர் அதிகாரிகள் கொண்ட குழு வொன்றை நியமிக்குமாறும் இக் குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத்தளபதிகள, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சிரேஷ்ட அதிகாரிகள் இடம்பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின்போது இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெல மற்றும் ஜனாதி பதியின் செயலாளரும் கலந்து கொண்டனர். (ம)

## ரெலோவின்....

இதன் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணியில் 6 பேரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் 3 பேரும், ரெலோ சார்பில் 2 பேரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) சார்பில் ஒருவரும் போட்டி யிடுவர்.

வவுனியா மாவட்டத்தில் ரெலோ சார்பில் மூவரும், கூட்ட ணியின் சார்பில் மூவரும், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் இருவரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) சார்பில் ஒருவரும்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணி சார்பில் நால்வரும், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் இரு வரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) சார்பில் ஒருவரும், ரெலோ சார்பில் ஒருவரும்,

திருகோணமலை மாவட்டத் தில் கூட்டணி சார்பில் மூவரும், ரெலோசார்பில் இருவரும், தமிழ் காங்கிரஸ் சார்பில் ஒருவரும், ஈ.பி. ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) சார்பில ஒருவரும்,

அம்பாறை மாவட்டத்தில் கூட்டணி சார்பில் ஐவரும், ரெலோ சார்பில் மூவரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) சார்பில் ஒருவரும் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவுள்ளனர் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# கூட்டணியின் கூட்டத்தை கூட்ட சங்கரியிடம் அனுமதி கேட்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தேர்தல்நியமனக் குழு வையும், மத்திய குழுவையும் எதிர்வரும் 15 ஆம் திகதி கூட்டு வதற்கு அனுமதிக்குமாறு கூட்ட ணியின் பொதுச் செயலாளர் இரா. சம்பந்தன் ஆனந்தசங்கரியிடம் அனுமதி கேட்டுள்ளார்.

கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டத்தை கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதி யின்றிக் கூட்டுவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு விதித்துள்ளதா லேயே சம்பந்தன் இவ்வனுமதி யைக் கோரியிருக்கின்றார்.

15ம் திகதி இக்கூட்டங்களைக் கூட்டுவதற்கு தனக்கு நேரம் இல்லை எனவும் 18 ஆம் திகதி இக்கூட்டங்களைக் கூட்டலாமென வும் சங்கரி கூறியிருக்கின்றார்.

18 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் வேட்பாளர் நியம னங்கள் உட்பட பல்வேறு விட யங்கள் குறித்து ஆராயப்படவுள் ளது. (த)

# கல்வி அமைச்சருக்கு மாணவர் அமைப்பு கடிதம்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை பிற்போடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து கொழும்பில் இயங்கும் மாணவர் அமைப்பொன்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத் துள்ளது.

ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தலும் 22 ஆம் திகதி மாகா ணசபைத் தேர்தலும் நடைபெற வுள்ளதால் தாங்கள் பரீட்சைக்குத் தயார் செய்ய முடியாத நிலை யில் உள்ளதாக அம்மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

மாணவர்களின் பரீட்சை பாதிக்காத வகையில் பொதுத் தேர்தலை நடாத்துவது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஆலோசனை நடத்தி தமக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. (ச)

## புத்திரசிகாமணி இ.தொ.காவில் இணைவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி யின் முன்னாள் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் புத்திர சிகாமணி இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் கட்சியில் இணைந்துள்ளார்.

கொழும்பிலீ நேற்று நடை பெற்ற இலங்கைத்தொழிலாளர் காங் கிரஸ் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் உபதலைவா ஆர்.யோகராஜன் இதனை உத்தி யோக பூர்வமாக அறிவித்தார்.

அத்துடன் இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் கட்சியின் யாப் புக்கமைய கட்சியின் நிர்வாக செயலாளராகவும் அவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த தீபாவளித் தினத்தன்று பொதுஜன ஐக்கிய முன்னணி கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தியது. இதனை புத்திரசிகாமணி கடுமை யாக விமர்ச்சித்திருந்தார். இதனால அவர் கட்சியின் ஒழுக்காற்று விசார ணைக்கு உட்படுத்தப்பட்டார். இதன் காரணமாகவே அவர் இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸில் இணைந்துள்ளார். (தி)

## 39 அமைச்சர்கள்...

சிங்கா தலைமையிலான காபந்து அமைச்சரவையில் பிரதமர் உட் பட 33 அமைச்சர்களும் பாராளு மன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர், டி.எம். ஜய ரத்தினா ஆகிய இரண்டு அமைச் சர்களுமாகத் தற்போது 35 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ள னர்.

இது இவ்வாறிருக்க தற்போது கபினெற் அந்தஸ்து உள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 இலிருந்து 15 ஆகக் குறைப் பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டு வருவதாகவும் இதில் தற்போது ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கி யுள்ள அமைச்சர்களின் பதவி களும் பறிபோகலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் என்பவற்றுக்குச் சொந்தமான அசையும் சொத் துக்களை எடுத்துச் செல்வதைத் தடுக்குமாறும் அரசின் செயலாளர் களுக்கும் ஜனாதிபதி உத்தரவிட் டுள்ளார்.

சில அமைச்சர்கள் முக்கியமான சில ஆவணங்களையும் அவர்கள் பயன்படுத்திய வாகனங்களையும் எடுத்துச் சென்றுள்ளதாகவும் இதனைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் அனைத்து அமைச்சின் செயலா ளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதி பதியின் செயலாளர் டபிள்யூ.ஜே. எவ்.கருணாரத்தின தெரிவித் துள்ளார்.

இதேவேளை இந்த அமைச்சர வைக் குறைப்புச் சம்பந்தமாக வலம்புரி ஏற்கனவே தலைப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்த மையும் குறிப்பிடத்தக்கது. (வ.ச)

## மெய்வல்லுநர் போட்டி

(உரும்பிராய்)

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல் லூரியின் அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு விருந்தினர்க ளாக உரும்பிராய் இந்துக் கல் லூரியின் பழைய மாணவர் சங்க (லண்டன்) உபதலைவர் வை.பெரியதம்பி, உபசெயலாளர் திருமதி சந்திரவேலு மற்றும் கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் து.கிரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-10)

✡ ✡ ✡

(சில்லாலை)

சில்லாலை றோமன் கத்தோ லிக்க தமிழ்க்கலவன் பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை வெள் ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கதிரைமாதா ஆலய முன்றலில் நடை பெறவுள்ளது.

அதிபர் திருமதி சறோஜினி தேவி கனகரத்தினம் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக வலிகா மம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்பு விருந்தினர்களாக வலி காமம் வலயக் கணக்காளர் என்.யோகேந்திரராஜா, சில்லாலை பங்குத்தந்தை வண.பிதா அருட்திரு ப.அன்ரனிப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-58)





அராலிமேற்கு வட்டு.கோட்டைக்காடு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நொச்சியம்பதி ச.ச.நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வை முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அமைச்சர் தி.மகேஸ்வரன் நிலையத்தை திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம். (படம்: ப.தேவா)


யா/ மண்டைதீவு மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்க

பொதுக்கூட்டமும் புதிய உறுப்பினர் தெரிவும் — 2004

இடம் : பாடசாலை மண்டபம்
திகதி : 14.02.2004 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி அதிபர்

(C/7035)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.